பக்கங்கள்: 15

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 06 திங்கட்கிழமை 23.09.2019 கதிர் 322

இனி து ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற சர்ச்சை தொடர்பில் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாஸாவுக்கும் இடையில் நீடிக்கும் இழுபறிக்குத் தீர்வு காணும் பக்கம் 02

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ்க் கட்சிகள் இணைந்து கருத்தொருமித்த தீர்மானம்!

## தமிழ் மக்கள் பேரவை முயற்சி

யாழ்ப்பாணம், செப். 23

தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் செயற்பட்டுவரும் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும், பொது அமைப்புகளுடனும் கலந்துரையாடி ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்தொருமித்த முடிவை எடுப்பதற்கான முயற்சியில் தமிழ் மக்கள் பேரவை களமிறங்கியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாளுதல் என்பது தொடர்பில் பொதுக் கலந்துரையாடலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை தமிழ் மக்கள் பேரவை மத்திய குழுவின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. பக்கம் 02

# அமெ. குடியுரிமை துறப்பை நிரூபிப்பாரா கோட்டாபய?

### சவால் விடுகிறார் அஜித் பெரேரா

கொழும்பு, செப். 23

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் பக்கம் 02

# இறுதி நேரத்திலாவது இணங்குவார் ரணில்

### நளின் பண்டார நம்பிக்கை

கொழும்பு, செப். 23

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்காவிட்டால் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்டுப் பயனில்லை எனவும், அவருக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவியைப் பக்கம் 02

# பொதுஜன பெரமுனவுக்கு தாவிய ஜெயானந்தமூர்த்தி



மட்டக்களப்பு, செப். 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சே.ஜெயானந்தமூர்த்தி நேற்று மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியில் இணைத்துள்ளார் என அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். பக்கம் 03

# எமக்கு அதிகாரத்தைத் தாருங்கள் நாட்டை மீட்டுக் காட்டுகின்றோம்

### அநுரகுமார ஹற்றனில் அறைகூவல்



கொழும்பு, செப். 23

இலங்கையில் 72 வருட காலமாக வீணாக்கப்பட்ட நாட்டைப் புதிய நாடாகக் கட்டி எழுப்ப ஆட்சிப் பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குங்கள் என்று கோரிக்கை விடுத்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்க. பக்கம் 02

# ராணுவ உறவுகள் இராஜதந்திரத்தின் ஒரு முக்கிய பகுதி

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

இராணுவத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலான உறவுகள், இராஜதந்திரத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். பக்கம் 03

# நிறைவேற்றதிகாரத்தை எதற்காக நீக்கக்கூடாது?

### அமைச்சர் மனோ விளக்கம்



கொழும்பு, செப். 23

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கக்கூடாது என சிறுபான்மைக் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாட்டை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.சுமந்திரன் தரப்பும், ஐ.தே.கவின் ரணில் தரப்பும் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்த நிலையில் நிறைவேற்றதிகாரம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை முகப்புத்தகப் பதிவில் பக்கம் 03

# 8 வயது மாணவி மீது துஷ்பிரயோக முயற்சி

### இரண்டு பேர் கைது

வவுனியா, செப். 23

வவுனியா, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 8 வயது மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டின் கீழ் இருவர் நெடுங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பக்கம் 03

# நாட்டின் சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம்

கொழும்பு, செப். 23

நில்வள மற்றும் கிங் கங்கை பகுதிகளில் தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக நில்வள கங்கையில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் கூறியுள்ளது. பக்கம் 03

# மீண்டும் வெள்ளை வான் வருமா? பலரும் இப்போது அச்ச நிலையில்

### கூறுகின்றார் சத்தியலிங்கம்

வவுனியா, செப். 23

மீண்டும் வெள்ளை வான் வருமா என்ற அச்சம் பல பேர் மத்தியில் இருக்கின்றது என வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். பக்கம் 03

# விசேட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதியே கோரினார் என்கிறார் பிரதமர் ரணில்

### மைத்திரியின் அறிவிப்புக்குப் பதில் அளித்து அவர் நேற்று அறிக்கை



கொழும்பு, செப். 23

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பான விடயத்தை ஆராய்வதற்கான விசேட அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதியே கூட்டுமாறு கோரினார் என விசேட அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் தன்னைச் சந்தித்து, நிறைவேற்றதிகார ஒழிப்பு வரைவைச் சமர்ப்பித்தனர் எனவும், நிறைவேற்றதிகார ஒழிப்பிற்கு அனைத்து கட்சிகளும் பக்கம் 03

## எமக்கு அதிகாரத்தை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கை அரசு இதுவரை கால மும் தனவாதிகளின் அரசாக செயல் பட்டது. இதை முடிவுக்குக் கொண்டு வந்து உழைப்பாளர்களின் உணர்வு புரிந்த அரசாக நாம் மாற்றி காட்டு வோம்.

நாட்டை எதிர்காலத்தில் கட்டியெ ழுப்பக் கூடிய பணம் உள்ளது. வெளி நாட்டுக் கடன்களையும் அடைத்து நாட்டைக்கட்டியெழுப்பக்கூடியவசதியும் உள்ளது. பணம் வேறு எங்கும் இல்லை. நமது நாட்டு அரசியல்வாதி கள்சிலரின் வீடுகளிலேயே இருக்கின் றது. அதேபோன்று இதுவரை கால மும் இந்த நாட்டின் மக்களுடைய பொது சொத்துகளையும் சூறையாடி வாழ்ந்த அரசுகளுக்கு முற்றுப்புள்ளி இட்டு தமது உழைப்புக்கு அப்பால் மேலதிகமான சொத்துகளை வைத்தி ருப்ப வர்களிடமிருந்து அவற்றை மீட்டு அதனை மக்கள் சொத்தாக மாற்றி புதிய ஆட்சியைக் கொண்டு செலுத்துவோம்.

குடும்ப ஆட்சிகளுக்கு இடங் கொடுக் காதும் ஊழல் நிறைந்த ஆட்சிகளுக்கு இடங்கொடுக்காதும் புதிய அரசு ஒன்றை உருவாக்குவ தில் மக்கள் சக்திக்கு மக்கள் ஆதரவு வழங்கவேண்டும்.

தோட்ட தொழிலாளர் பிள்ளைகள் என்றால் கொழும்பில் ஹோட்டல் வேலைகளுக்கும், வீட்டு வேலை களுக்கும் அங்குள்ள விடுதிகளை கவனிப்பதற்கும் ஈடுபடுத்த முடியும் என்று நினைத்து வாழ்கின்றனர். அவ்வாறு அல்ல இவர்களுக்குச் சமூக உரிமை அவசியமாக காணப் படுகின்றது. அதனை நாம் உருவாக் குவதற்கு அதற்கான வேலைத்திட் டங்களை முன்னெடுப்போம்.

இந்த நாட்டை போதைவஸ்து ஒரு புறமாக ஆட்டி வைக்கும் இக்காலப் பகுதியில் இளைஞர்கள் அதற்கு அடி மையாகி வருகின்றனர்.

நுவரெலியாவிலும், கொழும்பி லும் போதைப்பொருள் தயாரிப்பது இல்லை. இருப்பினும் இலங்கைக்குப் போதைப்பொருள் எங்கிருந்து வரு கின்றது. கடல் மார்க்கமாக, ஆகாய மார்க்கமாகக் கொழும்புக்கும், பிர தான நகரங்களை இலக்குவைத்து பிரதேசங்களுக்கும் கொண்டு வரப் படுகின்றது. இதன் பின்னணியில் அரசு செயல்படுகின்றது.

போதைப்பொருள் வியாபாரிகளை அரசும் அரசியல்வாதிகளுமே ஊக்கப் படுத்துகின்றனர். இவ்வாறு இருக்கும் பொழுது இதை எவ்வாறு ஒழித்தழிக்க முடியும். என்னிடம் இதனை இல் லாதொழிக்க திட்டம் இருக்கின்றது. எமக்கு பலத்தை தாருங்கள் நாம் இல்லாதொழிப்போம்.

நாட்டின் வளங்களைச் சூறையா டும் சக்திகளுக்கு நாம் இடங்கொடுக்க போவதில்லை. அண்மையில் தாமரை மொட்டு மலர்ந்தது. அங்கு 200 கோடி ரூபா ஊழல் ஏற்பட்டதாக ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.

அந்த ஊழல் ஏற்படாமல் இருந்தி ருந்தால் நுவரெலியாவில் 200 பாடசாலைகள் கட்டியமைத்திருக்க லாம். அமைச்சர் பதவிகளையும், தொழிற் சங்கத் தலைவர் பதவிகளை யும் வைத்துக் கொண்டுள்ள சிலர் சாதாரண மக்க ளின் வாழ்க்கையில் விளையாடி கொண்டு வருகின்றனர். இதனால் அவர்களின் உரிமைகள் பாதிப்புக்குள்ளாகின்றன.

இந்த நாட்டின் பொலிஸார் நன்கு திறமைமிக்க பயிற்சி பெற்றவர்கள். நாட்டின் இடம்பெறும் பாரிய குற்றச் செயல்களைக் கண்டுபிடிக்க வல்ல வர்கள். இருப்பினும் அரச தலையீட் டால் செய்யப்படும் குற்றங்கள் இவர் களால் கண்டுபிடிக்க முடியாது போகின்றது–என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடுநிலையாளராக இப்போது சபாநாயகர் கரு ஜயசூரிய வந்திருக்கின்றார் என்று தகவல்.

இந்தத் தகவலைச் செய்தியாக்கினால் எப்படித் தலைப்பிட லாம் என்று யோசித்தேன். அப்போது பழைய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் தலைப்பு எனக்கு நினைவுக்கு வந்தது.

என் நினைவு சரியாக இருக்குமானால் இது நடந்தது 1985 ஒக்ரோபரில்.

அப்போது விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகியவற்றின் தலைவர்கள் சேர்ந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (ஈ.என்.எல்.எவ்.) அமைத்திருந்த காலம். ஈ.என்.எல்.எவ்., புளொட், தமிழர் விடுதலைக் கூட் டணி ஆகிய தரப்புகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் அப்போதைய இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி மேற்கொண்ட சமரச முயற்சியின் பயனாக இலங்கை அரசுப் படைகளுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையில் ஒரு யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் காணப்பட்டது.

அந்த யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு ஒன்பது பேர் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் மூவர் தமிழர்கள். அந்த மூவரில் இரண்டு பேர் ஈ.என்.எல்.எவ். சமர்ப்பித்த – பரிந்துரைத்த – பட்டியலில் இருந்து இலங்கை அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் பேராசிரியர் சிவத்தம்பி. மற்றவர் திரு கோணமலை இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவரும், திருகோணமலை பிரஜைகள் குழுவின் அப்போதைய தலைவருமான ஆர்.கே.சிவபாலன். மூன் றாவது தமிழர் இலங்கை அரசினால் தேர்வு செய்யப்பட்டவர். அவரின் பெயர் எம்.சிவநாதன் என்று நினைக்கிறேன்.

நீதியரசர்கள் றொட்ரிகோ, அப்துல்காதர் எல்லோரும் இந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற் றிருந்தனர் என்று ஞாபகம்.

இந்த யுத்த நிறுத்தம் நீண்ட காலம் தாக்குப் பிடிக்க வில்லை. முறிந்து விட்டது. அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து Saturday Review (சற்றர்டே ரிவியூ) என்ற ஆங்கில வாரப் பத்திரிகை வெளியாகிக் கொண்டிருந்தது. அதன் ஆசிரியர் காமினி நவரட்ன. சிங்களவர். புலிகளின் கட்டுப் பாட்டில் யாழ்ப்பாணம் இருந்தபோதும் எந்தத் தடை, கட்டுப் பாடுகளுமின்றி தமது சைக்கிளில் யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாகத் திரிவதற்கான மதிப்பையும் மரியாதை யும் கொண்டிருந்த நடுநிலைவாதி. இது எனது கணிப்பீடு.

பேராசிரியர் சிவத்தம்பி மேற்படி யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டமை ஒரு முக்கிய விவகாரமாக புத்திஜீவிகள் மத்தியில் பேசப்பட்ட காலம் அது. அந்த விடயத்தை ஆங்கிலச் சிலேடையில் தலைப்பிட்டு, முதலாம் பக்கத் தலைப்புச் செய்தியாக அவர் வரைந்திருந்தார். அந்தச் செய்தியின் தலைப்பு என்ன தெரியுமா?

Professor turns Monitor'

'பேராசிரியர் மொனிட்டர்(கண்காணிப்பாளர்) ஆனார்' என்பது அதன் பொருள். அதாவது 'பேராசிரியர் பாடசாலை களின் வகுப்பு மொனிட்டர் ஆனார்' என்ற சிலேடைப் பாணியில் தலைப்பிட்டிருந்தார் அதன் ஆசிரியர் காமினி நவரட்ன.

அதுபோல இப்போது கரு ஜயசூரியவின் சமரசப் பொறுப்பை –

Speaker Turns Arbitrator (சபாநாயகர் நடுவர் ஆனார்) என்ற சாரப்படதலைப்பிடலாமோ என்று எனக்குள் சிந்தனை ஓடியது..

நேற்றுமுன்தினம் மாலையில் சபாநாயகரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துத் தமக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தரப்பட வேண்டும் என்ற முறைப்பாட்டை முன்வைத்தார் சஜித் பிரேமதாஸா.

நேற்றுப் பிரதமர் ரணிலும் அமைச்சர் சஜித்தும் ஒரே சமயத்தில் சபாநாயகரை அவரது இல்லத்தில் சந்தித்தனர் என்று தெரிகின்றது.

அங்கு சபாநாயகர் நடுநிலை வகிக்க, இரு தரப்புகளும் தத்தமது வாதத்தை முன் வைத்தனவாம்.

ஐ.தே.கட்சியின் கொள்கைப் போக்கைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய விடயங்கள் உடன் தீர்மானித்து வெளிப் படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ரணில், அந்த இரண்டும் தொடர்பில் தமது நிலைப்பாடு யாது என்பதைத் தாம் வெட்டவெளிச்சமாகத் தெரிவித்து விட்டார் எனச் சுட்டிக் காட்டினார்.

ஒன்று – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல் தொடர்பான நிலைப்பாடு.

இரண்டு – தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தமிழருக்கு வழங்கப் போகும் தீர்வு யாது என்பது.

இந்த இரண்டு தொடர்பிலும் என் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளேன் என்று கூறிய ரணில், சஜித் பிரேமதாஸா வேட்பாளராக நிறுத்தப்படுவாராயின் இவை இரண்டும் தொடர்பில் அவரின் நிலைப்பாடு யாது என்று கேள்வி எழுப்பினராம்.

சஜித்தின் முகத்தைப் பார்த்தார் சபாநாயகர்.

அவை பற்றிய விரிவான பதிலுடன் இன்று மீண்டும் சந்திப்புக்கு வருவார் எனப் பதிலளித்தார் சஜித்.

அதன் பிரகாரம் இன்று மீண்டும் சபாநாயகர் கரு ஜயசூரிய முன்னிலையில் ரணில் – சஜித் சந்திப்பு மீண்டும் இடம் பெறவிருக்கின்றது.

நடுவராகியிருக்கும் சபாநாயகரின் மத்தியஸ்த முயற்சியில் இந்த இழுபறிக்கு சமரசத் தீர்வு வருமா?

பெரும்பாலும் இன்று முடிவு தெரியும் என எதிர்பார்க்கலாம்.

**- மின்னல் -**



## லண்டன் பேரணி போராட்டத்தில் பறை முழக்கத்துடன் புலிக்கொடி!

பிரித்தானியாவில் வாழும் அனைத்து உலக நாட்டு மக்க ளும் ஒன்றிணைந்து உலக சுற்றுச் சூழல் மாசடைதலிற்கு எதிராகவும், இயற்கை வளங்கள் பாதிப்படைவதற்கு எதிராகவும் பெரியளவில் அணிவகுப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் தமிழர் பாரம்பரிய இசையான பறையுடன் உலகத் தமிழர்களை இனங்காட்டிய தமிழீழ விடுதலை கொடியுடன் அணிவகுப்பு போராட்டம் நடைபெற்றது.

## நாளை வரை மழை தொடரும்!

கொழும்பு, செப். 23

தற்பொழுது நிலவும் தென் மேற்கு பருவபெயர்ச்சி கால நிலை நாளை வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள் ளது.

இந்தக் காலநிலையின் காரணமாக மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தென்மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

தென்மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகா ணங்களில் 150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம்விஷேஅறிக்கை யில் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதி களில் பிற்பகல் 2.00 மணிக் குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய் யக்கூடும். ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் 75 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும். (ஐ)

## இறுதி நேரத்திலாவது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொடுக்கும் போராட்டத்தில் எப்படியாவது வெற்றி பெறுவோம் எனவும் பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இறுதி நேரத்திலாவது ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றிக்கான சாட்சியாக இருப்பார் எனத் தாம் எதிர்பார்க் கிறார் என்றும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழர்கள் எவ்வாறு கையாளுதல் வேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனடிப்படையில் தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் செயற்பட்டுவரும் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளுடனும், பொது அமைப்புகளுடனும் கலந்துரையாடி ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்தொருமித்த முடிவை எடுப்பதற்கான முயற்சியில், சமயப் பெரியார்கள், சமூகப் பெரியார்கள் மற்றும் புலமையா ளர்களை உள்ளடக்கிய குழு ஒன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது விரைவில் சந்திப்பை மேற்கொண்டு மேற்குறித்த தரப்புகளுக்கிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி அதனடிப்படையில் தமிழ் மக்களை நெறிப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ–07)

## அமெ. குடியுரிமை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தமைக்கான ஆவணங்களை வேட்புமனு தாக்கல் செய்ய முன்னர் வெளிப்படுத்தமுடியுமா? எனப் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள ஒருவரை ஜனாதிபதி யாகத் தேர்வு செய்யமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் தான் இரத்துச் செய்துவிட் டார் என வெறும் பேச்சளவில் மாத்திரமே பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய குறிப்பிடுகின்றார். உரிய ஆவணங்கள் ஏதும் இதுவரை உரிய இடத்துக்கும் நாட்டு மக்களுக்கும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எமது நாட்டின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக் கும் எவரும் அமெரிக்கப் பிரஜையை நாட்டின் ஜனாதிபதி யாக்கமாட்டார்கள்–என்றார். (ஐ)

# நிறைவேற்றதிகாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தியுள்ளார் அமைச்சர் மனோ கணேசன்.

அவரது பதிவில்–

1) நிர்வாக ஜனாதிபதி முறையை முழுமையாக ஒழிக்கக் கட்சி ரீதியாக, தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபோதும் ஆதரவைத் தெரிவிக்கவில்லை. இதே நிலைப்பாட்டிலேயே நானறிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய அரசாங்க பங்காளிக் கட்சிகளும் உள்ளன என நினைக்கிறேன்.

2) புதிய அரசமைப்பு யோசனைகளில் நாம் எமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியுள்ளோம்.

3) முழுமையாக ஒழிப்பது என்பது வேறு. அதிகாரங்களை வெட்டிக் குறைப்பது என்பது வேறு.

இந்த பதவிக்குரிய அதிகாரங்களை வெட்டிக்குறைக்க முழுமையான ஆதரவை நாம் தந்தோம். தருகிறோம். தருவோம். ஏற்கனவே 19ஆம் திருத்தத்தில் குறைத்தோம். இன்னமும் புதிய திருத்தங்கள் கொண்டு வந்து இன்னமும் அதிகாரங்களைக் குறைப்போம்.

4) ஆனால், முழு நாட்டு மக்களாலும் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஒரு ஜனாதிபதி பதவி இருக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. இந்த தேர்தலில்தான் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மலையகம், சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் பேதங்கள் இல்லாமல் முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாக மாறும் ஒரே சந்தர்ப்பம் நிகழ்கிறது. ஆகவே ஜனாதிபதி தேர்தல் முழு நாட்டையும் ஒரு நேர்கோட்டில் கொண்டு சேர்க்கின்றது.

5) நாடாளுமன்றத் தேர்தல் மாவட்டங்களில் நடைபெறுவதால், இதில் வேட்பாளர்கள் இன, மத, பிரதேச, ஜாதி அடிப்படைகளில்தான் நியமிக்கப்படுகிறார்கள். முற்போக்கு கட்சிகள், தமிழ் தேசியக் கட்சிகள் கூட வேட்பாளர்களை இன, மத, ஜாதி அடிப்படைகளில் தான் நியமிக்கிறார்கள். வேட்பாளர்களின் பிரசாரமும் இன, மத, பிரதேச, ஜாதி அடிப்படைகளில்தான் நடைபெறுகிறது. இது நாட்டை பல கோடுகளாகப் பிரிக்கின்றது.

6) ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான சிங்கள, பௌத்த வேட்பாளர்கள் எவராக இருந்தாலும், நேரடியாக சிங்கள பௌத்தர் அல்லாத மக்களை திரும்பி பார்க்கிறார்கள். நமது பிரச்சினைகளைக் காது கொடுத்து கேட்கிறார்கள். கலந்துரையாடுகிறார்கள்.

இப்போதுகூட பாருங்கள்! கோட்டாபய ராஜபக்ஷகூட தமிழ், முஸ்லிம் மக்களைப் பற்றி பேசுகிறார். அனுர குமார திசாநாயக்க தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் ஊடுருவுகிறார். இவை நல்லவைதானே!

இதை நான் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று வரவேற்கிறேன். எமது பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வுகளை தருகிறார்களோ, இல்லையோ, எமது தமிழ், முஸ்லிம் பிரச்சினைகள் தேசிய அரங்குக்கு வருகின்றன. கலந்துரையாடப்படுகின்றன.

7) இப்படியும் எளிமையாகச் சொல்லலாம். பிரதமர் பண்டாரநாயக்க, பிரதமர் டட்லி ஆகியோரால் ஒப்பந்தம் செய்ய மட்டும் முடிந்தது. ஜனாதிபதி ஜே.ஆரினால்தான் 13ஆம் திருத்தத்தை சட்டமாக்க முடிந்தது. முழுதாக அமுலாகுதோ இல்லையோ, 13 ஒன்றுதான் நமக்கு இருக்கும் ஒரே அதிகார பகிர்வுச் சட்டம்.

எனினும் எனது முக்கிய அடிப்படைக் கருத்து, முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதி ஆவதாகும். இதன் போது நாடாளுமன்றத் தேர்தலில் இல்லாத தேசிய விவாதங்கள் நடைபெறுகின்றன. இவற்றைப் பேசி பயனில்லை என்று சுலபமாக நிராகரித்து விடாதீர்கள்.

பேசப்படுவது, திரும்பிப் பார்ப்பது, கலந்துரையாடப்படுவது, காது கொடுத்து கேட்கப்படுவது, என்பவை இந்நாட்டில் மிக மிக மிக முக்கியமானவை. அதுவும் தேசிய அரங்குக்குப் போவது என்பது மிகவும் சாதகமான ஒரு விடயம்.

9) நாடாளுமன்ற பிரதமர் மாத்திரம் சொல்வதைச் செய்வார் என்பதற்கு இந்நாட்டில் எந்தவித உத்தரவாதமும் இல்லாதபோது, செய்கிறார்களோ, இல்லையோ, தேசிய அரங்கில் நமது அபிலாஷைகள் விவாதிக்கப்படுவது நல்லது. பேசப்படுவது அடுத்த ஐந்து வருடத்துக்கு தேசத்து இதய ஞாபகத்தில் அவற்றை இருத்தி இருக்கும்.

10) இப்போதுகூட, நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பு சொல்ல என்ன காரணம்? இது தேசிய ரீதியாக பேசப்பட்ட காரணத்தால் தானே!

இப்போது இருந்து பாருங்கள்!! ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும், பிரசாரக் காலத்தில், தமிழரின் முக்கிய எதிர்பார்ப்புகள் பற்றி தமது கருத்துகளைக் கூறியே ஆக வேண்டும்.

கோட்டாபய, அனுர மற்றும் சஜித், ரணில், கரு அல்லது மனோ கணேசனோ போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், 13 ஆம் திருத்தம், 13 பிளஸ், மலையக வீடமைப்பு, தோட்ட தொழிலாளர் சம்பளம், மாகாண சபைகள், காணாமல் போனோர், காணி மீளக் கையளிப்பு, இராணுவ வாபஸ், பௌத்த மயமாக்கல், ஐ.நா. தீர்மானங்கள், மத சுதந்திரம், மத மாற்றங்கள், இஸ்லாமிய மக்களின் விசேட பிரச்சினைகள், சஹ்ரான் பயங்கரவாதம் வேறு–சாதாரண முஸ்லிம் மக்கள் வேறு என்ற விடயம் ஆகியவை பற்றி தம் நிலைப்பாடுகளைக் கூறியே ஆக வேண்டும்.

ஒருசிலரின் சொந்த இரகசியக் காரணங்களுக்காக, ஏன் தமிழ் பேசும் மக்களாகிய நாம், இந்த தேசிய அரங்கை இழக்க வேண்டும்?–என்றுள்ளது. (ஐ)

## மீண்டும் வெள்ளை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளில் ஏதோவொரு கட்சி தான் ஜனாதிபதி ஆட்சியைக் கைப்பற்றும். ஒரு தேசியக் கட்சி தங்கள் வேட்பாளரை அறிவிக்காது திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு தேசியக் கட்சி வேட்பாளரை அறிவித்துவிட்டது. அவருடைய பெயரைக் கேட்டாலே எங்களுக்கு எல்லாம் பயமாக இருந்தது. சிலவேளை அவர் வந்துவிட்டால் என்ன நடக்கும் என்ற பயம் பலபேர் மத்தியில் இருக்கிறது. திருப்பி வெள்ளை வான் வருமா அல்லது கிறீஸ் மனிதன் வருவானா என்ற பயமெல்லாம் இருக்கிறது. ஆனபடியால் நவம்பர் 16 ஆம் திகதிக்கு பின் ஒரு நல்ல நிலை ஏற்படுமாக இருந்தால் வெளிநாடுகளில் இருப்பவர்கள் இங்கு முதலீடுகளைச் செய்ய முடியும்–என்றார். (ஐ-100)

## நாட்டின் சில

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாக நில்வள கங்கையை அண்மித்த பானந்துகம, பிடபெத்தர மற்றும் ஊறுவ பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் எனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கிங் கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், கங்கையின் தாழ் நிலப்பகுதியில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு நீர்பாசனத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி மாத்தறை, கடவத் சதர, திஹகொட, மாலிம்பட, கம்புறுப்பிட்டிய, அத்துரலிய, அக்குரெஸ்ஸ, பிடபெத்தர பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் பொதுமக்கள் திடீர் வெள்ளப்பெருக்கு நிலையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவதானத்துடன் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ராணுவ உறவுகள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பணியாற்றும் 12 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும், இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து, பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். இதில் அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் மற்றும் 12 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள், இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கீச்சகத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள, அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ், இராணுவத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலான உறவுகள், இராஜதந்திரத்தின் முக்கியமான ஒரு பகுதியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பொதுஜன பெரமுனவுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் பாசிக்குடாவில் உள்ள விடுதி ஒன்றில் மட்டக்களப்பு மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் மாவட்ட இணைப்பாளர் ப.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி உள்ளிட்ட குழுவினர் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொண்டனர்.

ஜெயானந்தமூர்த்தி 2004 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டார். 44,457 விருப்பு வாக்குகள் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

ஜெயானந்தமூர்த்தியும், அவரது குடும்பத்தினரும் துணை இராணுவக் குழுவினரால் அச்சுறுத்தப்பட்ட நிலையில் பிரிட்டனுக்குப் புலம் பெயர்ந்து சென்றனர். ஆட்சிமாற்றத்தை அடுத்து நாடு திரும்பிய அவர், ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தார். தற்போது அவர் பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளார். (ஐ)

# விசேட அமைச்சரவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இருக்கின்றன என சுமந்திரன் தன்னிடம் தெரிவித்தார் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் –

கடந்த 16ஆம் திகதி, சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழு என்னைச் சந்தித்து எங்கள் அரசாங்கம் என்ன செய்துள்ளது என கேள்வியெழுப்பினர். (நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புத் தொடர்பான) அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஆதரிக்கும்படி வலியுறுத்தினார்கள். 20 ஆவது திருத்தம் பற்றிய அமைச்சரவை முடிவை அவர்கள் கேட்டமையுடன், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்புத் தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டிய வரைவைச் சமர்ப்பித்தனர்.

20 ஆவது திருத்தத்தை மற்ற அரசியல் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது என்பதை சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு நான் சுட்டிக்காட்டினேன். எனவே மற்ற அரசியல் கட்சிகளின் கருத்துக்களை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டேன்.

நிறைவேற்று முறையை ஒழிப்பது குறித்து ஜே.வி.பி உடன் கலந்துரையாடினார் என சுமந்திரன் எம்.பி. 17ஆம் திகதி என்னிடம் கூறினார். 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென ஜனாதிபதி தனக்குத் தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதெனில், பொதுஜன பெரமுனவின் ஆதரவு தேவை என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து எம்.பி. சுமந்திரன் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையை யாரும் நிராகரிக்க வில்லை.

19 ஆம் திகதி காலை 8.16 மணிக்கு ஜனாதிபதி என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். 20 ஆவது திருத்தம் குறித்து விவாதிக்க அமைச்சரவைக் கூட்டத்தை அழைக்கலாமா என்று அவர் என்னிடம் கேட்டார். இதற்காக சிவில் சமூகம் ஒரு கோரிக்கை விடுத்துள்ளதாக நான் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். இந்த விவகாரத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு குறித்தும் சுமந்திரன் எனக்குத் தெரிவித்திருந்தார். எனவே, அமைச்சரவையை அழைத்து விவாதிப்பது பொருத்தமானது என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அந்தக் கூட்டத்தை அழைப்பது எளிது என்று நான் சொன்னேன். ரவி கருணநாயக்க என்னை அன்று அழைக்கவில்லை.

காலை 9.00 மணியளவில் அமைச்சரவை செயலாளர், எனது செயலாளரைத் தொடர்பு கொண்டு, அமைச்சரவைக் கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் என்று அறிவித்திருந்தார். அதன் பிறகு, சிவில் சமூகத்தின் பிரேரணையை தேவைப்பட்டால் பயன்படுத்துமாறு அமைச்சரவைச் செயலாளரிடம் எனது செயலாளர் குறிப்பிட்டார்.

நான் மதியம் 2 மணிக்கு அமைச்சர்களை அழைத்து இது குறித்து அவர்களுக்கு அறிவித்தேன். மிக சூடான விவாதம் இடம்பெற்றது. 20 ஆவது திருத்தம் குறித்து எந்த உடன்பாடும் இல்லை என்று அனைவரும் வெளிப்படையாகக் கருத்து தெரிவித்தனர்.

அமைச்சரவை கூட்டத்திற்கு முன்பு, அமைச்சர்கள் மத்தியில் எந்த உடன்பாடும் இல்லை என்று ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் மத்தியில் ஒருமித்த கருத்து இல்லை என்றும், அமைச்சரவை பிரேரணையை சமர்ப்பிப்பதில் அர்த்தமில்லை என்றும் கூட்டத்தின் ஆரம்பத்தில் நான் அமைச்சரவைச் செயலாளருக்கு ஜனாதிபதி முன் அறிவித்தேன். அந்தக் கூட்டத்தில் அமைச்சர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறினேன். அமைச்சர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர். இது பற்றி இறுதி முடிவை அப்பொழுது எடுக்காமல் விடுவது என நாங்கள் முடிவு செய்தோம்.

பிரேரணை தொடர்பாக அமைச்சரவை உறுப்பினர்களிற்கு கேள்வி இருந்தால், அது அமைச்சரவையில் விவாதிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அமைச்சரவை பாரம்பரியத்தை அது மீறுவதாகும். நான் யாரையும் அவமதிக்கவோ, குறை கூறவோ மாட்டேன் –என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், நேற்று மாத்தளையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, விசேட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதமர் கோரிக்கை விடுத்தார் எனக் கூறியிருந்தார்.

## 8 வயது மாணவி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி பயிலும் 8 வயது மாணவி ஒருவர் நேற்று முன்தினம் பாடசாலையில் மேலதிக வகுப்பு நிறைவடைந்த பின் பெற்றோரின் வருகைக்காக காத்திருந்துள்ளார்.

இதன்போது அந்தப் பாடசாலையில் கட்டட நிர்மாண வேலைகளைச் செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் சிறுமியை அழைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தனர் எனத் தந்தையால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து நெடுங்கேணிப் பொலிஸாரால் அந்த இருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-100)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கேள்வியால் எழும் கேள்விகள்!

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறித்து நேற்று முன் தினம் மாத்தளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் சர்ச்சைக்குரிய கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**தென்னிலங்கையில் சமூக ஊடகங்களில் ஒரு தொலைபேசி உரையாடல் பதிவு ஒன்று தாராளமாக உலவி வருகின்றது. யாரோ ஓர் அதிகாரிக்கு அரசியல்வாதி ஒருவர் மிக அவமானகரமான – தூஷண – வார்த்தைகளில் திட்டுவது அதில் அடங்கியுள்ளது.**

**இந்த உரையாடலுடன் நாட்டின் ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தும் தகவல்களே அதிகம் வெளிவந்த வண்ணம் உள்ளன.**

**ஒரு நாட்டின் தலைவர் – ஜனாதிபதி – இத்தகைய வார்த்தைகளைப் பிரயோகிப்பாரா என்று கூறும் பல அவதானிகள் அதனால் அந்தத் தொலைபேசி உரையாடல் பதிவு மோசடியானதாக இருக்கலாம் எனச் சந்தேகம் கிளப்புகின்றனர்.**

**ஆனால், மாத்தளையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் குறித்துப் பகிரங்கமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுப்பிய கேள்வி – குறிப்பு – சொல்லாடல் – அந்தப் பதவியில் இருப்போர் அப்படியும் பேச மாட்டார்கள் என மறுக்கமுடியாது எனும் நிலைப்பாட்டையே தந்துநிற்கின்றது.**

**"சர்ச்சைக்குரிய விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு நானே (ஜனாதிபதி மைத்திரிபால) அழைப்பு விடுத்தேன் என ரணில் விக்கிரமசிங்க ஆடைகளை அணிந்து கொண்டா கூறுகின்றார்?" – எனச் சந்தேகம் கிளப்புகின்றார் நாட்டின் ஜனாதிபதி.**

**நாட்டின் பிரதமர் உடுப்பு அணிந்துகொண்டு பேசுகின்றாரா அல்லது நிர்வாணமாக நின்றபடி பேசுகின்றாரா என்ற சந்தேகம் நாட்டின் ஜனாதிபதிக்கு வந்திருக்கின்றமையால், ஜனாதிபதி குறித்தும் அத்தகைய சந்தேகங்கள் எம்போன்ற நாட்டு மக்களுக்கு வருகின்றமை ஒன்றும் தப்பில்லைத் தானே...!**

**"அமைச்சரவையைக் கூட்டுவது தொடர்பாக கதைவிடும் ரணில் இப்போது அதனை ஆடை அணிந்து கொண்டு தான் பேசுகின்றாரா?" – என்று சந்தேகம் கிளப்பியிருக்கின்றார் இந்த நாட்டின் ஜனாதிபதி.**

**அவரின் இந்தப் பேச்சைக் கேட்கும்போது, இது போன்ற சில விடயங்களை ஒட்டி அவரிடமும் இதே மாதிரி எமக்குக் கேள்விகள் கேட்கவே தோன்றுகின்றன.**

**இந்த நாட்டின் நீண்டு, தொடரும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தருவேன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன், ஒரு தடவைக்கு மேல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் தொடர விரும்பேன் என்றெல்லாம் நாட்டு மக்களுக்கு, அடித்துக் கூறி உறுதிமொழி வழங்கித்தான் இப்பதவிக்கு வந்தார் அவர்.**

**அவற்றில் எதையும் அவர் செய்யவில்லை. நிறைவேற்றவில்லை. அப்படியிருக்க அதைச் செய்தேன், இதைச் செய்வேன் என்றெல்லாம் இன்றும் வெட்டிக் கிழித்து, வாய்ப்பந்தல் போடும் ஜனாதிபதி அந்த உரைகளை எல்லாம் ஆடை அணிந்து கொண்டுதான் ஆற்றுகின்றாரா என்ற கேள்வி எம் மத்தியில் இயல்பாக எழுவது தவிர்க்கக் கூடியதல்ல.**

**நான் தோற்றிருந்தால் என் கதையை எட்டு அடி மண்ணுக்குள் முடித்திருப்பார்கள். இந்தப் பிசாசுகளுடன் உடன்படேன் என்றெல்லாம் முழங்கிய அதே ஜனாதிபதிதான் அவர்களைப் பின்கதவால் அரச அமைக்க வைத்து, ஐம்பத்தியிரண்டு நாள்கள் சட்ட விரோத அரசு தொடர வழி செய்தார்.**

**அந்தப் பிசாசுகளுடன்தான் இப்போது கூட்டுச் சேரவும் அவர் தீர்மானித்திருக்கின்றார்.**

**இந்தச் செயல்களை எல்லாம் அவர் ஆடை அணிந்து கொண்டுதான் முன்னெடுக்கின்றாரா என்ற கேள்வி எம் மத்தியில் எழுவது தவிர்க்கமுடியாததுதான்.**

**அன்னச் சின்னத்தில் எதிரணி வேட்பாளராகக் களமிறங்கி அதன் மூலம் கிடைத்த வெற்றியால் ஜனாதிபதியானவர் மைத்திரியார். அந்த வெற்றியையும் அதனால் கிடைத்த பதவியையும் வைத்துக் கொண்டு அதன் மூலம் தான் சு.கவின் தலைமைப் பதவிகளைப் பிடுங்கி எடுத்தார் அவர்.**

**அதன் தலைமையில் இன்றுவரை அவர் தொடர்கின்றார். கடந்த தேர்தலில் 96 எம்.பிக்களுடன் சு.க. கூட்டு நாடாளுமன்றுக்குச் சென்றது. இன்று அவரிடம் எஞ்சியிருப்பவர்கள் ஆக இருபதே இருபது எம்.பிக்கள்தான். அவர்களும் எத்தனை நாள்களுக்கு என்பதே கேள்வி.**

**அவரது அணியிலிருந்த 75 எம்.பிக்களைப் பிடுங்கி எடுத்து, தனிக் கட்சி அமைத்திருக்கும் மஹிந்த தரப்பு மீது நடவடிக்கை எடுக்க லாயக்கற்ற கட்சித் தலைவராக இருந்து கொண்டு, மஹிந்தவின் கட்சிக்கு பின்னால் கூட்டமைப்பதற்கு மடிப்பிச்சை எடுக்கும் கட்சி தலைவராக இருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரியார்.**

**நாட்டின் பிரதான தேசிய கட்சி ஒன்றை இப்படி இழி நிலைக்குக் கொண்டு செல்லும் தலைமைத்துவ வழி நடத்தலை முன்னெடுக்கும் மைத்திரியார் ஆடை அணிந்து கொண்டுதான் அதைச் செய்கின்றாரா என்ற கேள்வி எழுவதும் நியாயமானதுதான்!**

# நாட்டை ஆட்சி செய்த சகலருமே வெட்கித் தலைகுனியவேண்டும்

## யாழ்ப்பாணத்தில் சுனில் ஹந்துன்நெத்தி



**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், செப். 23

வடக்கில் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராடுகின்றனர். அதேபோல தென்னிலங்கையில் போரை முன்னின்று போராடி அங்கவீனமான இராணுவத்தினர் ஓய்வூதியம் வழங்கவில்லை எனப் போராடுகின்றனர். அப்படியானால் இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் ஆட்சி நடத்திய அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். அவர்களால் நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ முடியாது என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஜே.வி.பி கட்சி. அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டினை ஆண்டு வரும் ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் மதவாதத்தையும் இனவாதத்தையும் வளர்த்து வருகின்றனர். கடந்த 2009 ஆண்டு உள்நாட்டு போர் முடிவடைந்தது. அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டை ஆட்சி செய்தார். அப்போது வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக யாரும் போராட முன்வரவில்லை. எமது கட்சியினாலேயே, முதன் முதலில் வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் எனப் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபயவின் அடியாட்களினால் எமது கட்சியின் செயற்பாட்டாளர்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் படுகாயமடைந்தும் இருந்தனர்.

போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்த காலமாகியும் இந்த நாட்டினைக் கட்டியெழுப்ப முடியவில்லை. இதற்குக் காரணம் ஊழல். மஹிந்த ஆட்சியில் ஊழல் நடந்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி ரணில் அரசு காப்பாற்றும். ரணில் ஆட்சியில் ஊழல் நடந்தால் மஹிந்த அரசு காப்பாற்றும். இவ்வாறு ஊழல் வாதிகளே நாட்டினை மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றனர். தற்போதைய அரசு, மஹிந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் விசாரணைகளை முன்னெடுத்தாலும் அது வெறும் கண்துடைப்பு மட்டுமே. மஹிந்த காலத்து ஊழல்களுக்குப் போதிய ஆதாரங்கள் ரணிலிடம் இருந்தும் அவர்கள் மஹிந்தவையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்றி வருகின்றனர்.

இனிவரும் காலங்களில் மஹிந்த குடும்பம் ஆட்சிக்கு வந்தால் கூட ரணிலின் ஆட்சியில் நடைபெற்ற மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. இவ்வாறான ஊழல்வாதிகளை மக்கள் ஒதுக்கி புதிய மக்கள் ஆட்சி ஒன்றை அமைக்க எமது கட்சிக்கு ஆதரவைத் தர வேண்டும்.

தற்போதைய அரசு வெறுமனே கட்டடங்களைக் கட்டி வருகின்றது. அதன் ஊடாக அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது. அனைத்துத் துறையிலும் முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும். மஹிந்த, ரணில், மைத்திரி தரப்பினர் நாட்டு மக்கள் மத்தியில் இனவாதத்தையும், மத வாதத்தையும் பரப்பி வருகின்றனர். இவர்களுக்கு இவை இல்லாதுவிட்டால் அரசியல் இல்லை. ஆனால் நாம் அப்படியல்ல.

நாட்டிலே வடக்கில் போரின் காரணமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராடி வருகின்றனர். அதேபோல தென்னிலங்கையில் போரை முன்னின்று களமாடிய அங்கவீனம் ஆக்கப்பட்ட இராணுவத்தினர் ஓய்வூதியம் கேட்டுப் போராடி வருகின்றனர். அந்த வகையில் போரின் பின்னர் ஆட்சி நடத்திய ஆட்சியாளர்கள் வடக்கு மக்களுக்கும் எதனையும் செய்யவில்லை. தெற்கு மக்களுக்கும் எதனையும் செய்யவில்லை. மாறாக ஊழல்களைதான் செய்தது. இவ்வாறானவர்கள் அரசியலில் இருப்பதற்கு வெட்கித் தலை குனிய வேண்டும். மக்கள் இவர்களை ஒதுக்க வேண்டும் – என்றார். (ஐ – 07)

# வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் இன்று சுகவீன லீவுப் போராட்டத்துக்கு ஆதரவு

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் இன்று ஒருநாள் சுகவீன லீவு போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் படியாக ரூபா 50,000 ரூபாவை வழங்குவதற்கு 24.09.2019 ஆந் திகதியில் அமைச்சரவை அனுமதி வழங்கப்படவுள்ளது, அரச சேவையில் பல்வேறு சேவைகளில் உள்ள அலுவலர்கள் பணிபுரிகின்ற போதிலும் குறிப்பிட்ட சில சேவையாளர்களின் கோரிக்கைகள் மட்டும் முன்னிலைப்படுத்தப்படுவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

நிறைவேற்றுதரச் சேவைக்கு மேற்படி படியை வழங்கும் போது ஏனைய சேவைகளின் சம்பளத்தில் பெரிய முரண்பாடுகள் ஏற்படவுள்ளன. இதனால் ஏனைய சேவையாளருக்கும் பொருத்தமான சம்பள அதிகரிப்பு வழங்கப்படாதவிடத்து அநீதி இழைக்கப்படவுள்ளது.

இந்த அநீதிக்கு எதிராக இன்று திங்கட்கிழமையன்று ஒரு நாள் சுகவீன லீவை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு பல்வேறு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சங்கங்கள், அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர் சங்கம், இணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி, கிராம உத்தியோகத்தர் சங்கம், இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு உத்தியோகத்தர்கள் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை முன்னேற்ற ஆசிரியர் சங்கம் உட்பட்ட 19க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்துள்ளன. இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் தனது பூரண ஆதரவினை தெரிவிப்பதுடன் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன்று திங்கட்கிழமை அன்று ஒரு நாள் சுகவீன விடுமுறையை அறிவித்து ஒத்துழைப்பு வழங்கி எமது பலத்தை வெளிக்கொணர்வதற்கு ஒன்றிணையுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றோம்.

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கமும் இன்று இடம்பெறும் அரச உத்தியோகத்தர்களின் ஒன்றிணைந்த சுகயீன விடுமுறைப் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவை வழங்கி நிற்கின்றோம். எனவே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மத்திய மற்றும் மாகாண சேவையைச் சேர்ந்த அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் – பயிலுநர் தரத்தினைச் அனைத்து உத்தியோகத்தர்களையும் இப்போராட்டம் பூரண வெற்றி பெற முழுமையான ஆதரவினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**நாளை 24.09.2019 செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: புனர்பூசம் காலை 6.56 வரை
திதி : தசமி பி.ப 12.05 வரை

இராகுகாலம் : 3.02 – 4.32
சுப நேரம் : 10.32 – 12.02

# ஆடம்பர மோட்டார் சைக்கிள் கடத்தி எரிப்பு



யாழ்ப்பாணம், செப். 23

இரண்டு குழுக்களுக்கு இடையேயான மோதலையடுத்து மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்திச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

7 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடம்பர மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ்வாறு எரியூட்டப்பட்டது என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.


இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

குமாரசாமிபுரம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை இனம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்று வள்ளுவர்புரம் பகுதியில் வைத்து எரித்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்;

# நீதியரசர் தலைமையில் புதிய விசாரணைக் குழு



கொழும்பு, செப். 23

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்க நான்கு நீதிபதிகளைக் கொண்ட புதிய விசாரணைக் குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இது தொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன் தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜனக டி சில்வா தலைமை தாங்குகிறார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிசந்த பந்துல கருணாரத்ன, மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் நிகால் சுனில் ராஜபக்ஷ, பந்துல குமார அத்தபத்து மற்றும் முன்னாள் நீதி அமைச்சின் செயலாளர் திருமதி டபிள்யூ எம்.எம். அதிகாரி ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்து இந்தக் குழு பக்கசார்பற்ற – முழுமையான விசாரணைகளை நடத்தும்.

குண்டுத் தாக்குதல்களுடன் நேரடியாக, மறைமுகமாக தொடர்புபட்டிருந்த தனிநபர்கள் மற்றும் அமைப்புகளையும் இந்தக் குழு கண்டறியும்.

அத்துடன் இந்தத் தாக்குதலை தடுக்கவோ தீவிரவாத செயற்பாடுகளைக் கண்டறிந்து தடுக்கவோ நடவடிக்கை எடுக்காத, தமது கடமையைச் செய்யத் தவறிய அதிகாரிகளையும் கண்டறியுமாறும் இந்தக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

3 மாதங்களுக்குள் இடைக்கால அறிக்கையையும், அடுத்த இரண்டு மாதங்களில் மேலதிக இடைக்கால அறிக்கைகளையும், இறுதி அறிக்கையை 6 மாதங்களிலும் சமர்ப்பிக்குமாறு இந்த விசாரணைக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 23

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –** மண்டைதீவு, பூம்புகார், அல்லைப்பிட்டி, வெண்புரவிநாயகர், மண்கும்பான், மண்டைதீவு இராணுவ முகாம், மண்கும்பான் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் –** கந்தசாமிநகர், நித்திக்குளம், சண்முகபுரம். கங்கனகுளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகா, அரசடிகுளம், செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிகுளம் வைத்தியசாலை, NW steel Industriesசெட்டிகுளம் MPCS ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் –** செம்மண்தீவிலிருந்து நானாட்டான் வரை, அளவாக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மண்தீவு ware House ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 2005 இல் கோட்டா வாக்களிக்கவில்லை



கொழும்பு, செப். 22

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தனது சகோதரருக்கு கோட்டாபய ராஜபக்ஷ வாக்களிக்கவில்லை என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய 2003 ஆம் ஆண்டில் அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டபோதிலும் அப்போது அதனை எவரும் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் அவர் தனது மனசாட்சிக்கும், நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் எதிராகச் செயற்படக்கூடாது என்று கருதி, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தனது சகோதரனுக்கு அவர் வாக்களிக்கவில்லை. மாறாக நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டு தனது வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கான தீர்மானத்தையே அவர் மேற்கொண்டார் .

அண்மையில் பத்திரிகையொன்றில் கோட்டாபய அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்ட பின்னரும் கூட, 2005 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தார் என்று செய்தியொன்று வெளியாகியிருந்தது. அரசியல் எதிரிகளால் திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் வேலை என்று நாங்கள் அந்தச் செய்தியைப் பெரிதாகக் கருத்திற்கொள்ளவில்லை. ஆனால் தற்போது இது குறித்த விசேட விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறோம் எனக் குற்ற விசாரணைப்பிரிவு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் பொலிஸாரையும் பயன்படுத்திக் கொண்டு எம் மீது சேறுபூசும் செயல்களில் இறங்கியிருப்பது புலனாகின்ற காரணத்தினால் இவ்விவகாரம் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எழுந்திருக்கிறது – என்றார்.




# அமெரிக்காவில் பிரதமர் மோடி:
# சீக்கிய, போரா, காஷ்மீரி பண்டிட் சமூகத்தினர் உற்சாக வரவேற்பு

வொஷிங்டன்,செப்.23

அமெரிக்காவில் சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடிக்கு அங்குள்ள சீக்கியர்கள், போரா மற்றும் காஷ்மீரி பண்டிட் சமூகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறைப் பயண மாக அமெரிக்காவில் 7 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதற்காக நேற்று முன்தினம் இரவு டில்லியில் இருந்து புறப்பட்ட அவர் நேற்று அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டன் நகர் சென்றடைந்தார்.

முதல் கட்டமாக, ஹூஸ்டனில் நடந்த எரிசக்தி மற்றும் எண்ணெய் நிறுவன தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பிரதமர் மோடி பேசினார்.




இதையடுத்து, ஹூஸ்டன் நகரில் பிரதமர் மோடியை சீக்கிய சமூகத்தினர் வரவேற்றனர். கர்த்தார்பூர் வழித்தடம் திறப்பதற்கு மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் உள்ளிட்ட சீக்கிய சமூகத்தினருக்கான பணிகளுக்காக பிரதமர் மோடிக்கு நினைவு பரிசு வழங்கி மகிழ்ந்தனர்.

இதேபோல், போரா சமூக உறுப்பினர்களும் பிரதமர் மோடியை ஹூஸ்டன் நகரில் வரவேற்று சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

அதைத்தொடர்ந்து அங்குள்ள காஷ்மீரி பண்டிட் சமூகத்தினர் அடங்கிய குழுவினரும் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினர். அவர்களில் ஒருவர் பிரதமர் மோடியின் கைகளுக்கு முத்தமிட்டபடி, 7 லட்சம் காஷ்மீரி பண்டிட்டுகளின் சார்பில் எங்களது நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம் எனத் தெரிவித்தார்.

## கார் – லொறி மோதல்; 5 பேர் உயிரிழப்பு

நாமக்கல் அருகே எருமைபட்டியில் நேற்று கார் – லொறி மோதிய விபத்தில் 5 பேர் பலியாகினர்.


நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் அருகேயுள்ள எருமைபட்டியில் நேற்று மதியம் கார்–லொறி நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில் காரில் இருந்த 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

இதுகுறித்து தகவல் அறிந்த சேந்தமங்கலம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று இறந்தவர்களின் உடலை மீட்டு நாமக்கல் அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஒபிட்டர் ஏழுரை ஆண்டுகள் நிலவைச் சுற்றி வர வாய்ப்பு

### இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவிப்பு



புவனேசுவரம்,செப்.23

ஒபிட்டர் கூடுதலாக ஏழரை ஆண்டுகள் நிலவைச்சுற்றி வர வாய்ப்புள்ளதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

சந்திரயான் – 2 விண்கல திட்டம் 98 சதவீதம் வெற்றி பெற்றிருக்கிறது. அதன் ஒபிட்டர் ஓராண்டுக்கு செயல்பட திட்டமிட்டிருந்தாலும் மேலும் ஏழரை ஆண்டுகள் நிலவைச்சுற்றி வர வாய்ப்பு உள்ளது என இஸ்ரோ தலைவர் கே.சிவன் கூறினார்.

உலகளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய சந்திரயான் – 2 விண்கலத்தின் விக்ரம் லாண்டர், கடந்த 7 ஆம் திகதியன்று திட்டமிட்டபடி நிலவின் தென் துருவ பகுதியில் மெல்ல தரை இறங்க முடியாமல்போய்விட்டது. அதன் தகவல் தொடர்பு எதிர்பாராத வகையில் துண்டிக்கப்பட்டது.

விக்ரம் லாண்டரின் ஆயுள்காலம் 14 நாள்கள் என்ற நிலையில், மீண்டும் அதனுடன் தொடர்பை ஏற்படுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு இஸ்ரோ, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசா ஆகியவற்றின் விஞ்ஞானிகள் பெரு முயற்சி மேற்கொண்டனர்.

அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. விக்ரம் லாண்டரின் ஆயுள்காலம் முடிந்து விட்டது.

இந்த நிலையில் ஒடிசா தலைநகர் புவனேசுவரத்தில் ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வந்த இஸ்ரோ தலைவர் கே.சிவன், விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், சந்திரயான் – 2 விண்கலம் 98 சதவீதம் வெற்றி பெற்றிருக்கிறது. இப்படி நாங்கள் கூறுவதற்கு 2 காரணங்கள் உண்டு. ஒன்று அறிவியல், மற்றொன்று தொழில்நுட்பம். தொழில்நுட்பத்தை காட்டுவதில், வெற்றி சதவீதம் கிட்டத்தட்ட முழுமையானது என குறிப்பிட்டார்.

எதிர்கால திட்டம் பற்றி கே.சிவன் குறிப்பிடுகையில், எதிர்கால திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது. எதுவும் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. அடுத்த ஆண்டு விண்வெளிக்கு ஆளில்லா திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதில் முன்னுரிமை அளிக்கிறோம். முதலில், விக்ரம் லாண்டருக்கு சரியாக என்ன நேர்ந்தது என்பதை புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்றார்.

விக்ரம் லாண்டரை பொறுத்தமட்டில், தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதன் காரணம் என்னவாக இருக்கும் என்பதை தேசிய அளவில் கல்வியாளர்களையும், இஸ்ரோ வல்லுநர்களையும் கொண்ட குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

விக்ரம் லாண்டருடன் மீண்டும் தகவல் தொடர்பு ஏற்படுத்த முடியவில்லை என ஒப்புக்கொண்ட சிவன், ஏதேனும் தரவுகள் கிடைத்தால், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சந்திரயான் – 2 விண்கலத்தின் ஒபிட்டர் பற்றியும் அவர் குறிப்பிட தவறவில்லை. இதுபற்றி அவர் கூறும்போது, ஆரம்பத்தில் ஒபிட்டர் ஓராண்டுக்குத்தான் நிலவை சுற்றி வர திட்டமிட்டிருந்தோம். அது மேலும் ஏழரை ஆண்டுகள் நீடிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்ற தகவலை வெளியிட்டார்.

மேலும், முழு திருப்தியை தருகிற வகையில் ஒபிட்டர் தொடர்ந்து அறிவியல் சோதனைகளைச் செய்து வருகிறது. ஒபிட்டரில் 8 கருவிகள் உள்ளன. எதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தனவோ, அந்த நோக்கங்களை அவை சரியாகச் செய்து வருகின்றன எனவும் இஸ்ரோ தலைவர் சிவன் கூறினார்.

## ஹூஸ்டனில் எரிசக்தி நிறுவன தலைவர்களுடன் மோடி சந்திப்பு



அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி அங்குள்ள எரிசக்தி நிறுவன தலைவர்களைச் சந்தித்து பேசினார்.

மோடி பயணத்தின் முதல் கட்டமாக, ஹூஸ்டன் நகரில் உள்ள ஹோட்டல் போஸ்ட் ஓக்கில் நடந்த எரிசக்தி மற்றும் எண்ணெய் நிறுவன தலைவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

இந்தக் கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும், வெளியுறவுத்துறை செயலர் விஜய் கோக்லேயும் பங்கேற்றனர்.

இதில் 16 நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதில் இந்தியா – ஹூஸ்டனுக்கு இடையே 430 கோடி பொலருக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. டெக்சாஸ் மாநிலத்தில் வாழும் இந்தியர்கள் ஏற்பாடு செய்துள்ள 'ஹவுடி மோடி' என்ற சிறப்பு நிகழ்ச்சியில் மோடி இன்று பங்கேற்கிறார்.

## ஒக்ரோபர் 21 இடைத்தேர்தல் வேட்புமனு தாக்கல் இன்று



சென்னை,செப்.23

தமிழக சட்டசபையில் காலியாக உள்ள நாங்குநேரி, விக்கிரவாண்டி தொகுதிகளுக்கு ஒக்ரோபர் 21 ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில் நாங்குநேரி, விக்கிரவாண்டி ஆகிய 2 தொகுதிகள் காலியாக உள்ளன.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலின் போது, நாங்குநேரி தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எச். வசந்தகுமார், நாடாளுமன்ற தேர்தலில் கன்னியா குமரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.பியானதால், தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார்.

இதேபோல், விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ராதாமணி உடல்நல குறைவால் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி மரணம் அடைந்தார்.

இதனால் இந்த இரு தொகுதிகளும் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில், தமிழக சட்டசபையில் ஆளும் கட்சியான அ.தி.மு.க. கூட்டணியின் பலம் 123 ஆகவும், தி.மு.க. கூட்டணியின் பலம் 108 ஆகவும் உள்ளது. சுயேச்சை எம்.எல்.ஏ.வாக டி.டி.வி.தினகரன் உள்ளார்.

இந்த நிலையில், காலியாக உள்ள நாங்குநேரி, விக்கிரவாண்டி ஆகிய இரு சட்டசபை தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் (ஒக்ரோபர்) 21 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் கமிஷனர் சுனில் அரோரா நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

# உலகுக்கு அச்சுறுத்தலான நாடு சீனா; டிரம்ப் குற்றச்சாட்டு

வொஷிங்டன், செப்.23
பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், அதிவேகமாக ராணுவத்தை பலப்படுத்தும் சீனா, உலகிற்கே அச்சுறுத்தலான நாடு என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் குற்றம்சாட்டியுள்ளார்.

சீனா - அமெரிக்கா இடையே இன்னும் வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படாததால் இரு நாடுகளும் மாறி மாறி வர்த்தகத்தில் பழிதீர்த்து வருகின்றன. 25 ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான சீனப் பொருள்களுக்கு அமெரிக்கா கூடுதல் வரி விதித்தது.



அதற்கு பழிக்குப்பழியாக 11 ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான அமெரிக்கப் பொருள்களுக்கு சீனா வரிவிதித்தது.

இது ஒருபுறமிருக்க தென் சீனக் கடலில் அமெரிக்கா தலையிடுவதை தடுக்கும் பொருட்டு, ராணுவத்தை பலப்படுத்துவதற்காக 10 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது சீனா.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தங்கள் நாட்டு அறிவுசார் சொத்துக்களைத் திருடி, தனது ராணுவத்தை சீனா பலப்படுத்துவதாகச் சாடினார்.

தனக்கு முன்பு அதிபர்களாக பதவி வகித்தவர்கள், அமெரிக்காவின் அறிவுசார் சொத்துக்களை சீனா திருடுவதை தடுக்கவில்லை என்று குற்றம்சாட்டிய டிரம்ப், தங்கள் நாட்டில் இருந்து ஆண்டுக்கு 50 ஆயிரம் கோடி டொலர்கள் அளவுக்கு பணத்தை சீனா எடுத்துச் செல்வதை முந்தைய அதிபர்கள் தடுக்கவில்லை என்றும் சாடினார்.

ஆனால் அதுபோன்று நடப்பதை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

## பயணிகள் இன்றி பறக்கும் பாகிஸ்தான் விமானங்கள்!

இஸ்லாமபாத், செப்.23
பயணிகள் வருகையில்லாமலேயே 46 பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இது தவிர ஹஜ் புனிதப் பயணம் செல்லும் 36 பாகிஸ்தான் விமா னங்களும் பெரும்பாலும் காலியாகவே பயணிக்கின்றன. இத்தகவலை அரசுக்கு விமானப் போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்த போதும் அரசுத் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பயணிகள் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் நிறுவனம் சுமார் 18 கோடி ரூபாய் இழப்பை சந்தித்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார நிலை மிகவும் கவலையளிக்கும் நிலையில் இந்த இழப்புகள் அதன் சுமையை மக்கள் மீது மேலும் அதிகரிக்கக்கூடும்.

தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளிக்கும் காரணத்தால் FATF மற்றும் உலக நாடுகளின் நிதியுதவி பாகிஸ்தானுக்கு நிறுத்தப்படும் சூழலும் பாகிஸ்தானுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

## அல்பேனியாவை தாக்கிய கடுமையான நிலநடுக்கம்



டிரானா, செப்.23
ஐரோப்பிய நாடான அல்பேனியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

ரிச்டர் அளவு கோலில் 5 புள்ளி 6 ஆக பதிவான நிலநடுக்கம் அந்நாட்டு தலைநகர் டிரானா மற்றும் துறைமுக நகரமான டர்ரஸ் ஆகியவற்றில் உணரப்பட்டது. நிலநடுக்கம் காரணமாக ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

அந்த இடிபாடுகளில் சிக்கி ஏராளமான வாகனங்கள் சேதமடைந்தன. மேலும் 50 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கம் காரணமாக அச்சமடைந்த பொதுமக்கள் சாலைகளிலும், பூங்காக்களிலும் இரவுப் பொழுதைக் கழித்தனர். கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் இது, என்று அந்நாட்டு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக

## பிரான்ஸில் மீண்டும் மஞ்சள்சட்டை போராட்டம்



பாரிஸ், செப்.23
பிரான்ஸ் நாட்டில் மீண்டும் வலுத்துள்ள மஞ்சள் சட்டை போராட்டம் அந்நாட்டு அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தி உள்ளது. எரிபொருள் விலை குறைப்பு தொடர்பாக பிரான்ஸில் மஞ்சள் சட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக ஓய்ந்திருந்த இந்தப் போராட்டம் தற்போது மீண்டும் வலுப்பெற்றுள்ளது. இந்தநிலையில் இந்தப் போராட்டம் அரசுக்கும், அதிபருக்கும் எதிரானதாக மாறி வன்முறையில் முடிந்துள்ளது.

தலைநகர் பாரிஸில் நடந்த போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். இதனால் ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள் சாலைகளில் தடுப்புகளை ஏற்படுத்தி தீயிட்டு எரித்தனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் அதிபர் அலுவலகம், நாடாளுமன்றக் கட்டடம், அரசு அலுவலகங்களுக்குச் செல்லவிருந்த 7 ஆயிரம் அரசு ஊழியர்களைத் தடுத்து நிறுத்தினர். இந்தப் போராட்டம் தொடர்பாக 153 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

## மெக்ஸிக்கோவில் கடல் சீற்றம் ஊருக்குள் புகுந்தது கடல் நீர்!



மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட புயல் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பஜா கலிபோர்னியா தீபகற்பப் பகுதியில் மணிக்கு 121 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய காற்றினால் கடல் சீற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக ஊருக்குள் கடல் நீர் புகுந்தது.

மேலும் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ஆனால் வெள்ளம் மற்றும் புயலில் சிக்கி யாரும் காயமடைந்தார்கள் என்றோ உயிரிழந்தார்கள் என்றோ இதுவரை தகவல் இல்லை என மெக்ஸிக்கோ அரசு தெரிவித்துள்ளது.

## சவுதி தாக்குதலைச் சுட்டிக்காட்டி அமெரிக்காவை சீண்டும் ரஷ்யா

மொஸ்கோ, செப்.23
சவுதியில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலை, புத்திசாலித்தனமான அமெரிக்க ஏவுகணைத் தடுப்பு அமைப்பால் தடுக்க முடியவில்லையா என்று ரஷ்யா சீண்டியுள்ளது.



ஆயுதச் சந்தையில் முன்னணி இடம்பிடிப்பது தொடர்பாக ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே முட்டல் மோதல் நிலவி வருகிறது. தங்கள் நாட்டுத் தயாரிப்புகள் தான் சிறந்தவை என்று இரு நாடுகளும் மாறி மாறி பிரசாரம் செய்து வருகின்றன.

அந்த வகையில் சவுதி அரம்கோ எண்ணெய் நிறுவனம் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலை வைத்து அமெரிக்காவை ரஷ்யா சீண்டியுள்ளது. அமெரிக்காவின் ரேய்த்தியோன் (raytheon) நிறுவனத் தயாரிப்பான பாட்ரியாட் ஏவுகணைத்தடுப்பு அமைப்பை சவுதி பயன்படுத்தி வருகிறது.

இந்த அமைப்பால், தாக்குதலைத் தடுக்க முடியவில்லையா? என்று ரஷ்யாவின் பாதுகாப்புத்துறை செய்தி தொடர்பாளர் மரியா ஜகரோவா (Maria Zakharova) கேள்வி எழுப்பியுள்ளார். ஓராண்டுக்கு முன், அமெரிக்காவின் ஏவுகணைகள், இலக்கை தாக்கி அழிக்காதமை அனைவருக்கும் நினைவிருக்கலாம் என்றும் அவர் கிண்டலடித்துள்ளார்.

அண்மையில் துருக்கிக்குச் சுற்றுப் பயணம் சென்ற ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், தங்கள் நாட்டுத் தயாரிப்பான எஸ். 400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை வாங்கி இருந்தால், தாக்குதலைத் தவிர்த்து இருக்கலாம் என்று தெரிவித்தார்.

பாட்ரியாட் அமைப்பானது, எந்த திசையில் தாக்குதல் நடத்த வேண்டும் என்று தீர்மானித்து வைக்கப்படுகிறதோ அங்கு மட்டுமே தாக்குதல் நடத்தும். ஆனால், எஸ்.400 அமைப்பானது 360 டிகிரி கோணத்திலும் தாக்குதல் நடத்தும். கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவு கணையை தடுத்து அழிக்கும் திறன் பாட்ரி யாட்டுக்கு இருந்தாலும், குறைந்தபட்ச உயரத்தில் பறந்து தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள், பாட்ரியாட்டின் ரேடார் கண் களில் மண்ணைத் தூவி விடும் என்று கூறப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikathir






# உறை கடலில் ஊடுருவல்

(நேற்றைய தொடர்ச்சி)

1893 ஜூன் 24 இல் பலத்த கைய சைப்புக்களுக்கு மத்தியில் நோர்வேயிலிருந்து கிழக்காக முதலில் சைபீரியா நோக்கி இவர்கள் புறப்பட்டார்கள். வழியில் சில வருடங்களுக்கு இவர்களுக்கு தேவையான பொருள் பண்டங்கள் வண்டி இழுக்கும் நாய்கள் என்பனவும் ஏற்றப்பட்டன. இனி வடக்கு நோக்கி துருவம் ஊடாக பயணிக்க வேண்டிய நிலையில் ஒக்ரோபர் ஆரம்பம் முதல் பல வாரங்கள் ஆக்டிக் வட்டத்துள் பனிப் படலத்தோடு அசைய முடியாத போராட்டமாக தென்பட்டது.

ஒக்ரோபர் 25 இல் சூரியன் மறைந்து கொண்டதும் காற்றில் இயங்கும் ஒரு மின்பிறப் பாக்கி கப்பலை ஒளியூட்ட போராடத் தொடங்கியது. அனைத்து செயற்பாடுகளும் மந்த நிலையில் இருக்க நாள்கள் வெறுமனே கழியலாயின. குழுவினரிடையே விரக்தி தாண்டவமாடியது. இவர்களைச் சமாளிப்பதே நன்சென் பாடு பெரிய தலைவலியாக உருவெடுத்தது.

ஒரு சூறாவளி ஆதல் வீசி இந்தப் பனிப் பாளங்களை பிளக்க மாட்டாதா என நன்சென் தவித்தான். 1894 தை மாதம் அதாவது புறப்பட்டு ஏழு மாதங்களை எட்டும் நிலையில் வடதிசை சற்று வழிவிடுதலுக்கான அறிகுறிகள் தென்பட்டன. 22 மார்ச்சில் இவர்களது கப்பல் அகலாங்கு 80 இனை அடைந்து இருந்தது. இந்த வேகத்தில் துருவத்தை அடைவதாயின் ஐந்து வருடங்கள் பிடிக்கும் என்பது நன்செனின் கணிப்பு. இப்படியாக அந்தப் பயணம் சாத்தியமானதா?

நாளொன்றிற்கு ஒன்றரை கி.மீ. கப்பல் பயணிப்பது பெரிய காரியமாகப்பட்டது. 8 ஜனவரி 1895 இல் அவர்கள் அகலாங்கு 83.34 இனை எட்டி இருந்தனர். துருவக் கரடிகளும் ஸீல் எனப்படும் துருவ நாய்களும் வாழும் தரைப்



பரப்பொன்றை துருவத்தை கடந்து இவர்கள் எட்டினால்தான் இவர்களுக்கான புதிய உடனடி உணவுகள் கிடைக்கும்.

26 பெப்ரவரியில் கப்பலில் இருந்து சறுக்கு வண்டியில் தேவையான அவசியமான பொருள்களுடன் முன்னேற முயன்ற நன்செனும் நண்பனும் வண்டிகள் சேதமடைந்தமையால் மீண்டும் கப்பலுக்கே திரும்பி இருந்தனர். இவர்களுக்கு தேவையான பொருள்களை ஏற்றியதும் வண்டியை இழுக்க நாய்களாலும் இயலவில்லை. எனவே மீண்டும் சிக்கனமாக திட்டமிட்டு எடையினை கணிசமாகக் குறைத்து வேகத்தை அதிகரித்து துருவத்தினை எட்டும் முயற்சியுடன் 14 மார்ச்சில் அவர்கள் புறப்பட்டனர்.

துருவத்தை எட்டி மீண்டும் கப்பலுக்கு திரும்பும்வரை கப்பலில் இருப்பவர்கள் காத்திருக்க வேண்டும். தேவைப்படின் பின்புல உதவிகளை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். 50 நாள்களில் இவர்கள் 660 கி.மீ பயணித்து துருவத்திற்கு கிட்ட நெருங்கி இருந்தனர். வெப்பநிலை



- 40 செல்சியஸாக இருந்தது.

கருவி வாசிப்பு அகலாங்கு 86.13 ஆக இருக்க மேலும் வடக்கே 3 பாகைக்கு மேல் அதாவது 314 கி.மீ நகரவேண்டிய நிலையில் திட்டத்தைக் கைவிட வேண்டிய நிலமை எழுந்துவிட்டது.

ஜோன்சனின் விரல்கள் விறைத்து விட்டன. இனி நன்செனாலும் இயலாத நிலைமை. இனித் துருவத்தை கோட்டை விட்ட அதாவது கைவிட்ட அவர்கள் இருவரும் அருகில் உள்ளதாக கருதப்படும் பனி போர்த்தியதீவு ஒன்றை அடையாளம் கண்டு அங்கு சென்று ஒரு மாதம் தங்கும் திட்டத்தை வகுக்கிறார்கள்.

முதலாவது தடயமாக ஒரு மரப்பலகை துண்டு 2 மாதங்களின் பின்னர் கண்களில்படுகிறது. அடடே என்ன ஆனந்தம் - அந்நிய பூமியில் தெரிந்தவன் ஒருவனைக் கண்டது போலாக அதில் தமது முதலெழுத்து திகதி அகலாங்கு நெட்டாங்கு என்பனவற்றை குறித்து விட்டு மேலும் பயணம் தொடர்கிறது. பயணமோ துருவத்தை விலகியே செல்கிறது. துருவ நரியொன்றின் காலடித் தடங்களை சில நாள்கள் கழிந்து கண்ட போது மேலும் உற்சாகம் அதிகரிக்கலானது.

தொடர்ந்தும் பயணிக்க பனிப் பாளங்களில் துருவக் கரடிகளின் காலடித் தடங்கள் தென்படலாயின. தொடர்ந்து ஸீல்ஸ், திமிங்கிலங்கள் ,கடற் பறவைகள் என்பன தாராளமாக கண்கள் குளிரக் காட்சி கொடுத்தன.

இனி நாய்களுக்கும் இவர்களுக்கும் உணவுக்குப் பஞ்சமில்லை என்கின்ற நிலைமை. பனிப் பாளங்கள் உறுதி குறைந்தவையாக காணப்பட்டமை நிலைமையை சிக்கல் ஆக்கியது. எங்கே எப்போது உடைவு ஏற்படும் ஏது கடலுக்குள் அமிழ்ந்துவிடும் என்கின்ற ஏக்கம் எழவே செய்தது.

எங்கிருந்து வெளிப்பட்டதோ துருவக் கரடியொன்று சற்றும் எதிர்பாராத வேளையில் இவர்களைத் திடீரெனத் தாக்கியது. ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு துப்பாக்கியைத் தேடிப்பிடித்து சமாளித்துக் கொண்டமை அதிசயமே.

சந்தித்துக் கொண்ட தரைப் பிராந்தியத்தில் ஒரு குளிர்கால முகாமை மீண்டும் அமைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. பல மாதங்கள் அங்கே குளிரில் மாட்டுப்பட்டே ஆக வேண்டும். அங்கே மூன்று அடி ஆழமாக குழி வெட்டி சுற்றவர கற்களால் அரண் அமைத்து கடற்குதிரை எனப்படும் walrus இனத்தின் தோலினால் கூரை அமைத்து அடுத்து வரும் எட்டு மாதங்களுக்கான வதிவிடத்தை அவர்கள் இருவரும் தயார் செய்து கொண்டனர்.

துருவக் கரடி, வல்றஸ், ஸீல்ஸ் என்பன தாராளமாக கிடைப்பதால் உணவுப் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை. பொழுது போவதுதான் பெரும் பிரச்சினை. தொடர்பாடல் என்ற பேச்சுக்கே இடமில்லை. குறிப்புக்களை எழுதிக் குவிப்பதை விட வேறு வழியில்லை. மனிதர்கள் எவரையும் சந்திக்கும் சாத்தியமே இருக்கவில்லை. விலங்குகள் தான் அவர்களது உறவுகள், எதிரிகள், உணவுகள் எல்லாமே.

1895 கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் அவர்கள் வைத்திருந்த பாண் மற்றும் சொக்கலேட் கைகொடுக்க நிறைவேறி 1896 புத்தாண்டும் பிறந்து இருந்தது. 1896 மே மாதம் தாங்கள் அவ்விடத்தை விட்டு தென் மேற்கே பயணிப்பதாக ஒரு குறிப்பை தமது வதிவிடத்தில் காட்சிப்படுத்திவிட்டு அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். அவர்கள் செல்லும் வழியெங்கும் கிடைத்த தடயங்கள் அவர்களது கையில் இருந்த தரைப்பரப்பு வரைபடங்களுடன் ஒத்துப்போகவில்லை.

தயார் செய்த படகுகளில் ஆபத்தான போராட்டம் மிக்க பயணத்தினை அவர்கள் தொடரலாயினர். கடற் பறவைகள் இவர்களது வயிற்றுப் பசிக்காக துப்பாக்கிகளுக்கு இரையாகின. கடற்குதிரைகளின் தாக்குதலுக்கு உட்பட்டு படகு சேதமடைந்தது.

திருத்த வேலைகளைத் தொடர்ந்து ஜூன் 17, 1896 இல் புறப்பட தயாரான போது நன்செனின் காதுகளில் ஒரு நாயின் குரைப்பு ஓசை கேட்டது. இவர்களிடம் நாய்கள் எதுவும் எஞ்சி இருக்கவில்லை.

எனவே மீண்டும் அந்தச் சூழலை ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டது. சத்தங்கள் வித்தியாசமாக இருந்தன. மனிதத் தடயங்கள் தென்பட்டன. கண்முன்னே சற்றும் எதிர்பராமல் ஒருவன் வெளிப்பட்டது அதிர்ச்சியாக இருந்தது. அது யாராக இருக்கலாம் என ஆராயப் புகுந்த போது அதிர்ச்சி மேலும் வலுத்தது.

(இன்னும் வரும்)



# யாழில் மூன்று வாகனங்கள் மோதி விபத்து!



யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத் திற்குள்ளாகின.

கொக்குவில் முதலியார் சந்தியில் இந்த சம்பவம் நடந்தது.

பிரதான வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி மீது லொறி மற்றும் பட்டா ரக வாக னங்கள் மோதியுள்ளன. இதில் முச்சக்கர வண்டி கடுமையாகச் சேதமடைந்துள்ளது. சாரதி காயமடைந்தார். அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ஐ)

# ஓட்டோ மோதிய விபத்தில் ஒருவர் படுகாயம்



வவுனியா, செப். 23

வவுனியா குருமன்காட்டு சந்தியில் வீதியை கடக்க முற்பட்டவரை ஓட்டோ மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு சந்தியில் வீதி யைக் கடக்க முற்பட்ட நபரை மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி சென்ற ஓட்டோ மோதியதால் இவ் விபத்துச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் பாதையினை கடக்க முற்பட்ட 40வயது மதிக்கத்தக்க திருநாவற்குளத்தைச் சேர்ந்த சிதம்பரம் செல்லத்துரை என்ற நபர் படு காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து 50 மீற்றர் தொலைவில் பாதசாரிகள் கடவை இருந்தும் பாதையினை கடக்க முற்பட்ட நபர் பாதசாரிகள் கடவையினை பயன் படுத்தாது வீதியினூடாக அவதான மின்றி கடக்க முற்பட்ட சமயத்திலியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக வவு னியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித் தனர். இச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை வவுனியா போக்கு வரத்து பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (இ - 100)

# உரிய தீர்வு இல்லையேல் வாக்களிக்கமாட்டோம்!

## மிரட்டும் கிழக்குப் பட்டதாரிகள்



மட்டக்களப்பு, செப். 23

அரச நியமனம் கோரிப் போராட்டம் நடத்தி வரும், வேலையில்லாப் பட்டதாரிகள் தமக்கு தீர்வு கிடைக்காத நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை அளிக்காமல் புறக்கணிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வேலையில்லாப் பட்டதாரி கள் நேற்று முன் தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான வேலையில்லாப் பட்டதாரிகள், அவர்களுடைய பெற்றோர் கலந்துகொண்டனர் .

அவர்கள் தெரிவிக்கையில் –

அரச நியமனம் கோரி கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக் கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உண்ணாவிரதம் மற்றும் போராட்டங்களை மேற்கொண்டு வந்தோம். ஆனால் இது வரைக்கும் எமக்கு ஒழுங்கான நியமனங்கள் கிடைக்க வில்லை. 2019 ஆம் ஆண்டு வரைக்கும் இதுவரை பட்ட தாரிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு அந்தந்த ஆண்டு நியமனங்களை வழங்கியிருந்தால் இவ்வாறு வேலையில்லாப் பட்டதாரிகள் அதிகரித்திருக்க முடியாது.

அரசு எமக்கு நியமனங்கள் வழங்காது ஏமாற்றிவரு கின்றது. எனவே எமக்கு நியமனம் வழங்காவிடில் நாங்களும் எமது உறவுகள் இந்த வருடம் நடக்கவிருக்கும் ஜனாதி பதித் தேர்தலில் வாக்களிக்காது புறக்கணிக்கவுள்ளோம் ஏன அகில இலங்கை ரீதியாக வேலையில்லாப் பட்டதாரி கள் தீர்மானம் எடுத்துள்ளோம் .

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையில்லாப் பட்டதாரிகள் ஆகிய நாங்களும் எமது உறவுகள் உட்பட சுமார் 10 ஆயிரத் துக்கு மேற்பட்ட வாக்குகள் இருக்கின்றன. எனவே எமக்கான தீர்வு தரப்படவில்லை எனில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் எமது வாக்குகளை அளிக்காது புறக்கணிப்போம்.

எனவே இதன் முன்னோடியாகத் தேர்தல் ஆணையகத் திற்கு தபால் அட்டைகளை அனுப்பவுள்ளோம். ஆகவே எமக்கான தீர்வினை உடனடியாக அரசு பெற்றுத்தரவேண்டும் – என்றனர். (ஐ)

# பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்து முன்னெடுப்பு

கொழும்பு, செப். 23

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று 13ஆவது நாளாகவும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தியே நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் இவ்வாறு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச் சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் நோக் கில், மற்றுமொரு கலந்துரையாடலை இந்த வாரம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மாயா துன்னே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சம்பளப் பிரச்சினை தொடர்பாக பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்க ளின் தொழிற்சங்கப் பிரதிநிதி களிடம் இடைக்காலப் பரிந்து ரையொன்றை முன்வைத்த போதிலும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என வும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அஞ்சல் மூலம் வாக்களிக்க 30 வரை விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 23

ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குப் பெட்டிகளை எண்ணும் மையங்களுக் குக் கொண்டு செல்லும்போது சிறப்பு பாதுகாப்புத் திட்டத்தைச் செயற்படுத்தவேண்டி யதன் அவசியத்தையும் மஹிந்த தேசப்பிரிய இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# தர்ஷிகா கொலை வழக்கு; விவரம் வெளியிட தடை!

றொறன்ரோ, செப். 23

கனடா – றொறன்ரோவில், வீதியில் கணவனால் படுகொலை செய்யப்பட்ட தர்ஷிகா ஜெகநாதனின் வழக்கின் விவ ரங்களை வெளியிடுவதற்கு நீதிமன் றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தர்ஷிகா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சசிகரன் தனபால சிங்கம் தனது இரண்டாவது நீதிமன்ற விசாரணையை கடந்த 18ஆம் திகதி எதிர்கொண்டார். இந்த விசாரணையின் போது ஊடகங்கள் கொலை வழக்கின் விவரங்களை வெளியிடுவதற்கு நீதி மன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்காபரோவில் 27 வயதான தர்ஷிகா வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என 38 வயதான சசிகரன் மீது முதலாம் நிலைக் குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது. கடந்த 18ஆம் திகதி சசிகரன் இரண்டா வது நீதிமன்ற விசாரணையை எதிர் கொண்டபோது அவரை மிச் ஏஞ்சல் என்ற வழக்கறிஞர் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

இந்த வழக்கறிஞர் ஏற்கனவே தர்ஷிகாவைத் தாக்கிய குற்றச்சாட்டில் சசிகரனைப் பிரதிநிதித்துவப்படுத்திய வர். சசிகரனின் அடுத்த நீதிமன்ற விசா ரணை அடுத்த மாதம் இரண்டாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

தர்ஷிகாவுக்கும் அவரது கொலை தொடர்பான குற்றச்சாட்டை எதிர்கொள் ளும் அவரது முன்னாள் கணவனான சசிகரன் தனபாலசிங்கத்துக்கும் இடை யிலான கசப்பான வாழ்வின் விவரங் கள் நீதிமன்றின் தகவல் அறியும் சட்டத் தின் கீழ் பெறப்பட்டுள்ளன.

அவற்றில் 2017ஆம் ஆண்டிலேயே (கனடாவுக்கு வந்த சில வாரங்களில்) சசிகரனுக்கு எதிராக தர்ஷிகா, முன் வைத்த பல குற்றச்சாட்டுக்கள் அதிர்ச்சி யளிப்பதாக உள்ளன.

தர்ஷிகா கொல்லப்படுவதற்கு 18 மாதங்களுக்கு முன்னரே, தர்ஷிகா நீதி மன்றில் தனது கணவர் மூலம் எதிர் கொண்டதாகக் கூறப்படும் துஷ்பிரயோ கத்தை வழக்கு விசாரணை ஒன்றில் விவரித்துள்ளார். (ஐ)

northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# இறுதிக்குள் நுழைந்தது ரில்கோ கொங்கியூரஸ்



நடப்பாண்டிற்கான வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நடப்பு சம்பியன் ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து தமிழ் யுனைட்டட் அணி மோதியது.

பெருந்திரளான ரசிகர்களின் மத்தியில் ஆரம்பமான இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை இரு அணிகளும் வெளிப்படுத்தியபோதும் ரில்கோ கொங்கியூரஸ் அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை அருமையாகப் பயன்படுத்தி 03:00 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரஸ் அணி மேலும் ஒரு மேலும் ஒரு கோலை பெற்று ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்குத் தகுதி பெற்றது. ரில்கோ கொங்கியூரஸ் அணி நடப்பு சம்பியன் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# இந்திய கிரிக்கெட் அணியின் சலுகைத் தொகை இரட்டிப்பு

வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் தினசரி சலுகைத் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி உள்நாட்டில் அசத்தியது போலவே வெளிநாட்டு தொடர்களிலும் அசத்தி வருகிறது.

இந்நிலையில், வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் போது வீரர்களின் அன்றாட சலுகை தொகையை இரட்டிப்பாக்கி அவர்களுக்கு வெகுமதி அளிக்க நிர்வாகிகள் குழு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக வெளியான அறிக்கையின்படி, இந்திய வீரர்கள் மற்றும் பயிற்சி ஊழியர்களுக்கு முந்தைய தொகையான 125 டொலர் உடன் ஒப்பிடும்போது இப்போது 250 டொலர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், உள்நாட்டில் விளையாடும் போது அளிக்கப்படும் சலுகை தொகையில் எந்த மாற்றமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் குழுவின் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் போது விமானத்தில் வணிக வர்க்க பிரிவில் பயணம், தங்குமிடம் மற்றும் சலவை என வீரர்கள் மற்றும் ஊழியர்களின் செலவினங்களுக்கு பிசிசிஐ தனியாக பணம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில், வெளிநாட்டு சுற்றுப் பயணத்திற்கான சலுகை தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது அதிகமாக உள்ளது என கூறப்படுகிறது.

இந்த ஆண்டு இந்திய அணி பெரும்பாலும் உள்நாட்டில் விளையாடுவார்கள் என்றாலும், அவர்கள் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நியூசிலாந்து செல்ல உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கெதிரான தொடர்; பாகிஸ்தான் அணி அறிவிப்பு

இலங்கை அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் வீரர்கள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட 'ருவென்டி 20' தொடர் ஆகியவற்றில் விளையாடவுள்ளது.

இந்த சுற்றுப் பயணத்தின் முதற்கட்டமாக இரண்டு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடர் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையிலேயே, பாகிஸ்தானின் ஒருநாள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தேர்வாளர் மற்றும் தலைமை பயிற்சியாளர் மிஸ்பா – உல் – ஹக் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் ஒருநாள் குழாத்தில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் சகலதுறை வீரர் மொஹமட் நவாஸ் மற்றும் துடுப்பாட்ட வீரர் இப்திகார் அஹ்மட் ஆகியோர் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

இதேநேரம் உலகக் கிண்ணத்தில் விளையாடிய வேகப் பந்துவீச்சாளர்களான சஹீன் அப்ரிடி மற்றும் ஹசன் அலி ஆகியோருக்கு இலங்கை அணியுடனான ஒருநாள் தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இதில் சஹீன் அப்ரிடி டெங்கு நோய் காரணமாகவும், ஹசன் அலி முதுகு உபாதை காரணமாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் வாய்ப்பினை இழந்திருக்கின்றனர்.

இவர்கள் தவிர உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக விளையாடிய சிரேஷ்ட சகலதுறை வீரர் மொஹமட் ஹபீஸ் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஓய்வை அறிவித்த சொஹைப் மலிக் ஆகியோரும் அணியில் இடம் பெறவில்லை.

சப்ராஸ் அஹ்மட்டை தலைவராக கொண்ட பாகிஸ்தான் ஒருநாள் அணியில் துடுப்பாட்ட வீரர்களாக பாபர் அசாம், இமாம் – உல் – ஹக், ஆஸிப் அலி மற்றும் பக்கார் சமான் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இதேநேரம் சகலதுறை வீரர்களாக ஹரிஸ் சொஹைல் மற்றும் இமாத் வஸீம் ஆகியோர் உள்ளனர். வஹாப் ரியாஸ், மொஹமட் ஹஸ்னைன் மற்றும் உஸ்மான் ஷின்வாரி ஆகியோர் வேகப்பந்துவீச்சாளர்களாக பாகிஸ்தான் அணிக்கு உறுதி வழங்க, சதாப் கான் பிரதான சுழல் பந்துவீச்சாளராக பெயரிடப்பட்டுள்ளார்.



# ஆப்கனை வீழ்த்தியது பங்களாதேஷ்!

முத்தரப்பு 'ருவென்ஷஷ் 20' தொடரின் ஆறாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை நான்கு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வீழ்த்தியுள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பங்களாதேஷ், சிம்பாவே மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதும் ருவென்டி 20 முத்தரப்பு தொடர் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆறாவது போட்டியில் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் பந்துவீச்சை தேர்வுசெய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹஸரத்துல்லா சசாய் அதிகபட்சமாக 47 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

இதையடுத்து, 139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. அந்த அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசன் தனி ஆளாக போராடி பங்களாதேஷை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

பங்களாதேஷ் அணி 19 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 139 ஓட்டங்கள் எடுத்து



வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட ஷகிப் அல் ஹசன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்கள் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இதேவேளை, இந்தத் தொடரின் இறுதிப் போட்டி நாளை பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மக்களை ரணில் தொடர்ந்து ஏமாற்றுகிறார்

## சாடுகின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, செப். 23

வடக்கு மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராகிறார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பிரதமருக்கு வடக்கு மக்கள் தொடர்பாகத் திடீரென அக்கறை வந்துள்ளது.

கடந்த நான்கரை வருடங்களாகப் புதிய அரசமைப்பொன்றை கொண்டுவருவதாகக் கூறினாலும் அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள ஒரு யோசனையைக்கூட கொண்டுவரவில்லை.

இந்நிலையில், வடக்கு மக்களைக் கவனிக்க தயாராக உள்ளார் என அவர் தெரிவித்துவருகிறார். இது தான் மீண்டும் வடக்கு மக்களை ஏமாற்றும் திட்டமாகும்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வித தவறுகளையும் செய்யவில்லை. நாம் எமது தலைவருடன் இணைந்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, பொதுஜன பெரமுனவின் சகோதரர்களையும் இணைத்துக்கொண்டு கடந்த 4 நான்கு வருடங்களாகப் யணித்தோம் – என்றார். (ஐ)

# வீட்டில் கஞ்சாச் செடி வளர்த்தவர் கைதானார்

## கீரிமலையில் சம்பவம்



யாழ்ப்பாணம், செப். 23

சட்டத்துக்கு விரோதமாக கஞ்சாச் செடிகளை வீட்டில் வளர்த்த குற்றச்சாட்டில் கீரிமலைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், அங்கு கஞ்சா போதைப்பொருளை வாங்குவதற்கு வந்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் 19 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கீரிமலை பகுதியில் உள்ள வீடு சிவில் உடை தரித்த பொலிஸாரினால் நேற்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வீட்டுத் தோட்டத்துக்குள் மறைவாக வளர்த்த மூன்று கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் வீட்டில் கஞ்சாவைக் கொள்வனவு செய்ய வந்திருந்த கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து எட்டு கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ – 07)

## கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய

# அபிவிருத்தி பணிகளுக்கான அடிக்கலை நட்டு வைத்தார் யாழ். மாநகர முதல்வர்





யாழ்ப்பாணம், செப். 23

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ சேனாதி ராசாவின் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான ஊரெழுச்சி திட்ட (கம்பெரலிய) நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டின் சிபார்சில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் மலசலகூடத் திருத்த நடவடிக்கைக்கான முதற்கட்டமாக நீர் தாங்கி அமைப்பதற்கான ஆரம்ப பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து சிறப்பித்ததுடன், முதல் அடிக்கல்லையும் நட்டு வைத்தார்.

இந் நிகழ்வில் யாழ் மாநகர பிரதி முதல்வர் து. ஈசன், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

# டி.எம்.சுவாமிநாதனுக்கு ஆணைக்குழு அழைப்பு

முன்னாள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனை ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று அவரை முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வட கடல் நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே அவருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடகடல் நிறுவனத்தின் தலைவர் எஸ்.ரி.பரமேஸ்வரனையும் இன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




காலைக்கதிர் Kalaikathir



வி.வின்.மகாலிங்கம்

# தேர்தல் திருவிழா!

# கொண்டாட்டமா? திண்டாட்டமா?

தேர்தல் வருகிறது. வேட்பாளர்களின் வீதியுலா, ஊர் உலா, வீட்டு முற்ற தரிசனம் என்று ஒரே அமர்க்களமாக இருக்கப்போகிறது. அலங்கரிக்கப்பட்ட வீதிகள், புதிய புதிய கட்சி அலுவலகங்கள், ஊர்திகள் என்று கண்படும் இடமெல்லாம் கலர்புல்லாகக் காட்சி கொடுக்க, கூப்பிய கையோடு வாயெல்லாம் பல்லாக வேட்பாளர் காட்சி தந்து முற்று முழுவதும் இலவசமாகவும் கணக்கு வழக்கு இல்லாமலும் வாக்குறுதிகளை மழையாகப் பொழிவார் கள். இதற்கென்றே கடைவிரிக்கக் காத்திருக்கும் ஊடகங்களுக்கு இதைவிட நல்ல காலம் இருக்க முடியாது.

மக்களின் மனத்தைக் கலக்கித் துவைத்துப் பிழிந்து குழப்பி ஒரு கை பார்த்து விடுவார்கள். வேட்பாளரின் உரைகளை அக்குவேறு ஆணி வேறாக அலசுவதிலும் சிலர் தமக்கான தேவை கருதி தேவையானபடி வேட்பாளரின் உரைகளில் இருந்து ஒரு பகுதியை மட்டுமோ ஒரு வசனத்தையோ அன்றி ஒரு சொல்லைக் கூட எடுத்து வைத்துக் கொண்டு இலக்கணஇலக்கியக்காவியங்கள் படைப்பார்கள். திரை மறைவில் திரவியங்கள் தண்ணி வெண்ணியெல்லாம் தாராளமாகப் பரிமாறப்படும். மக்கள்தான் பாவம். திகைப்புற்றும் பேதலித்தும் குழப்பமுற்றும் வெறுப்புற்றும் வெறிகொண்டும் மயக்கமுற்றும் அவஸ்



தைப்படப் போகிறார்கள். அதனால் அந்த மக்களுக்காக சில விடயங்களைச் சொல்லி உதவலாம் என்று நினைக்கிறேன்.

எந்தவொரு வேட்பாளரோ கட்சியோ எடுத்து வீசும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற சட்டமோ கட்டுப்பாடோ யாருக்கும் கிடையாது. நிறைவேற்றா விட்டால் அவர்களை எவ்விதத்திலும் தண்டிக்க முடியாது. எழுத்தில் வடித்துக் கொடுத்தால் என்ன வாயால் கனவான் ஒப்பந்தமாகக் கொடுத்தால் என்ன அவை காற்றில் பறக்கலாம். அதைத் தடுக்க நாட்டிலோ அன்றி உலகத்திலோ எந்த வழியும் இல்லவே இல்லை. தேர்தல் முடிவு வந்ததும் அவரவர் தத்தம் சொந்த வழியில்தான் பயணிப்பர். நீதி, நியாயம், அறம், சரி, பிழை எதற்கும் முன்னுரிமை கிடையாது.

**யாரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதை விடவும் யாரை ஜனாதிபதியாக வர விடக்கூடாது என்பதே எம்முன் உள்ள பெரும் சவாலாகும்.**

சுய நலன்களும் கட்சி நலன்களும் அடுத்த தேர்தலில் வெல்லும் வழிகளும் மட்டுமே முன்னுரிமை பெறும். இவையெல்லாவற்றிற்கும் முன்னுரிமை கொடுத்து அதற்கப்புறம்தான் மக்கள் நலன், நாட்டுநலன் என்று ஏதாவது செய்வார்கள். அந்த மக்கள் நலன், நாட்டு நலன் என்று வரும்போதுதான் வெவ்வேறு கட்சிகள் தலைவர்கள் வெவ்வேறு அளவில் வெவ்வேறு விதமாகச் செயற்படுவார்கள்.

அதனால் வேட்பாளரின் பேச்சுக்களை வாக்குறுதிகளை எள்ளளவும் உள்வாங்காமல் இப்போதே குப்பையில் வீசிவிட்டு எந்தத் தலைவர் எந்தக் கட்சி தமிழருக்கும் நாட்டுக்கும் ஒப்பீட்டளவில் நன்மை செய்ய வாய்ப்பு அதிகம் என்பதை தேர்தல் காலத்திற்கு முன்பிருந்த அவர்களின் இயற்கையான மனோபாவம், செயற்பாடு, விடயங்களைச் சாதிக்கும் வல்லமை, மற்றும் அவர்களுக்கு வரக் கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் அழுத்தங்களை சவால்களை அவர்கள் எவ்விதம் கையாண்டு நமக்கும் நாட்டுக்கும் நன்மைகளைச் செய்ய வாய்ப்பு இருக்கும் என்பவற்றை எமது அரசியல் அறிவாலும் அனுபவத்தாலும் தெளிந்து அவர்களுக்கே வாக்களிக்க வேண்டும். தவிர வேட்பாளரின் தேர்தல்கால வாக்குறுதிகளைப் பற்றியெல்லாம் யோசித்து எம்மை நாமே வருத்தக் கூடாது. உண்மையில் தேர்தல் விடயம் அவ்வளவு இலகுவானது. புன்சிரிப்போடு சிந்திப்போம்,அதைச் சந்திப்போம்.

## ஜனாதிபதித் தேர்தல்

ஜனாதிபதித் தேர்தலை எடுத்துக்கொள்வோம். மஹிந்த அணி, ரணில் அணி இரண்டைத் தவிர மைத்திரி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியோரும் வேறு சிலரும் கூட வேட்பாளரை நிறுத்த வாய்ப்புகள் உண்டு. மக்கள் விடுதலை முன்னணிக்கும் கூட்டம் சேர்ந்துள்ளது. அதனால் 51% வாக்குகள் எந்தத் தரப்புக்கும் கிடையாமலும் போகலாம். இரண்டாம் விருப்பு வாக்கு எண்ண வேண்டி வரலாம். மைத்திரி என்ன முடிவு எடுத்தாலும் சந்திரிகா தலையிட்டாலும் சுதந்திரக் கட்சிக் கூடாரம் காலியாகி அந்த அணியில் இருப்போரில் பலர் மஹிந்தவுக்கும் சிலர் ரணில் தரப்புக்கும் ஆதரவு வழங்குவதைத் தடுக்கவே முடியாது.

எனவே மைத்திரி அணி பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. மக்கள் விடுதலை முன்னணியும் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாதபடியால் அவர்களின் கூட்டத்திற்குப் போகிறவர்களும் அவர்களுக்குவாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே தமிழ் மக்களாகிய எமது வாக்கு ரணில் தரப்புக்கா மஹிந்த



**தமிழா! சிந்தித்து செயற்படு**

தரப்புக்கா?. என்பதற்கே நாம் விடை காண வேண்டும். யாரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதை விடவும் யாரை ஜனாதிபதியாக வர விடக்கூடாது என்பதே எம்முன் உள்ள பெரும் சவாலாகும்.

தமக்குக் கிடைக்காத வாக்குகளை எப்படியும் தமது எதிர்தரப்புக்கு போகாமல்தடுப்பதற்காகவே எதிர் தரப்பின் வாக்குகளை பிரிப்பதற்காக சிறு சிறு வேட்பாளரையும் போட்டியில் இறக்கும் தந்திரங்களை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டு; சும்மா கொள்கை கோட்பாடு என்று குழம்பி வெற்றி வாய்ப்பு இல்லாத வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் நமக்கு வேண்டாத இராட்ஷதர்கள் முடிசூட வழிவகுக்கக் கூடாது. வெற்றிவாய்ப்பு இல்லாத வேட்பாளரை முற்றாக மறந்துவிட வேண்டும்.

எமது தேவை அரசியற் தீர்வும் அபிவிருத்தியும்தான். இரண்டுக்குமேசமமான முன்னுரிமைதான். இரண்டுக்குமே நாம் போராடும்போது ஒரேகாலத்தில் இரண்டும் கிடைத்தாலும் அல்லது ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ ஒன்றுதான் கிடைத்தா லும் அல்லது இரண்டிலும் பகுதியாகக் கிடைத்தாலும் கிடைப்பதை நாம் தவற விடக்கூடாது. கிடைப்பதைப் பெற்றுக்கொள்ளும் அதேநேரம் கிடைக்க வேண்டியதற்குத் தொடர்ந்து போராட வேண்டும். வாழ்க்கையே போராட்டம்தான் என்பதை மறக்கக் கூடாது.

## மஹிந்த அணி

மஹிந்தவின் 10 வருட ஆட்சி ஈழத் தமிழரின் இருண்ட காலம். அதில் கோட்டாபயவின் வகிபாகமே முதன்மையானது. குறிப்பாக 2009 ஆம்

**கோட்டாபயாவுக்கும் கூலிக்கு வெடி கொளுத்தும் அளவிற்கு வறுமையில் வாடும் தமிழர் இன்றும் கணிசமாக இருக்கிறார்கள்.**

ஆண்டை ஈழத்தமிழர் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்கவே மாட்டார்கள். கோட்டாபய



வுக்கும் கூலிக்கு வெடி கொளுத்தும் அளவிற்கு வறுமையில் வாடும் தமிழர் இன்றும் கணிசமாக இருக்கிறார்கள். கூலி கொடுத்து அந்தக் கூலியாளரின் இரத்தத்தை உறிஞ்சிப் பிழைப்பவர்களிடம் இன்னும் சில தலைமுறைக்கு நிதிபலம் இருக்கத்தான் செய்யும். அதே கோட்டாவையே ஜனாதிபதியாக்க இந்த அணியினர் முடிவெடுக்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படியான ஆட்சியை முன்னெடுக்க இருக்கிறார்கள் என்று தெரியாத சிறு பிள்ளையும் இருக்குமா?.

இந்த நயவஞ்சக நரிகள், பிணம் தின்னிப் பறவைகளுக்கு போர்தான் வேண்டும், குழப்பங்கள்தான் வேண்டும், அமைதியற்ற கொதிநிலைதான் வேண்டும். வெளிநாட்டில் ஈழம் என்றும் புலிக்கொடி என்றும் தேசியம் சுயநிர்ணயம் என்றும் வெறுமனே போலிப் புலிவேடம் போட்டு, கூத்தாடி முரசுகொட்டும் ஒரு கூட்டம்தான் மஹிந்த கோட்டா அணியின் சத்துணவு. இந்த அணியினர்தான் உள்நாட்டில் கிறிஸ்பூதம், குள்ள மனிதன், ஆவாகுழு, பாதாளக் குழு என்று பலதையும் உருவாக்கி நாட்டில் அமைதி இருக்காமல் பார்த்துக் கொள்கின்றார்கள்.

தொழிற் சங்கங்களை தம்வசப்படுத்தி தேவையற்ற வேலைநிறுத்தங்கள் மூலம் ஆட்சியாளருக்கு தொல்லை கொடுப்பதற்காக நாட்டையும் மக்களையும் கசக்கிப் பிழிகிறார்கள். எப்படியாவது சிங்கள தமிழ் இரு தரப்பிலுமே வெவ்வேறு அணியைச் சேர்ந்த குழுக்களை வைத்துக் கொண்டு அவர்கள் மூலம் அனைத்து மத மொழித் தீவிரவாதங்களையும் உருவாக்கி வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். (13 ஆம் பக்கம் பார்க்க...)



# மீண்டும் பதவிக் கதிரையில் சவேந்திர சில்வா!

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவைதான் மஹிந்த அணியினரின் போசாக்கு. இவர்கள் தமிழர் மட்டுமல்ல முஸ்லிம்கள் மட்டுமல்ல தம்மை எதிர்க்கும் சிங்களவருக்கும் கூட வானுலக வரம் கொடுக்கத் தயங்கவே மாட்டார்கள். ஜே ஆர், பிரேமதாச, சந்திரிகா, ரணில் போன்றோரால் போரில் ஈடுபட்டிருந்த இருபகுதியினரின் மிகப் பெரிய இழப்புகளையும், நாட்டின் பேரழிவையும் கருத்திற் கொண்டதாலும் எங்கோ ஒரு மூலையில் அவர்களின் உள்மனதில் உறங்கிக் கொண்டிருக்கும் சொற்ப மனிதாபிமானத்தாலும் அவர்களால் போரைமுடிக்க முடியாதிருந்தது.

ஆனால் உலகமே வெட்கி நாணித் தலை குனியுமாறு மனித மனத்தால் நினைக்க முடியாத கொடுமைகள் ஊடாக பேரழிவுகள் ஊடாக போரை முடித்து வைத்து; தான் உயிர் உள்ளவரை அரசாளக்கூடியதாக சட்டங்களை உருவாக்கி, நீதி சட்டம் ஜனநாயகம் மனிதாபிமானம் அத்தனையையும் குழிதோண்டிப் புதைத்து அரசாண்டவர்கள்தான் இந்த மஹிந்த கோட்டா அணி. ஆம், இவர்கள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு தருவார்கள். தீர்வு என்ன?. இலங்கையில் தமிழர் 16 வீதமானால் இலங்கையின் எப்பகுதியிலும் தமிழர் 16 வீதத்துக்குமேல் இருக்காதவாறு பார்த்துக் கொள்வதே அவர்கள் தரவிருக்கும் தீர்வு. பெயரளவில் இல்லாவிட்டாலும் நடைமுறையில் ஒரு கொடூரமான சர்வாதிகார இராணுவ ஆட்சியே நடைபெறும்.

காணிகளைப் படிப்படியாக விடுவித்துக் கொண்டிருந்த இராணுவம் அண்மையில் நடந்த மஹிந்தவின் அரசியற் புரட்சியை அடுத்து அதை முற்றாக நிறுத்தியதையும் வடக்கில் நூற்றுக் கணக்கான சிங்களச் சிற்றூழியர்கள் திடீரென நியமிக்கப்பட்டதையும் சற்று ஓய்ந்திருந்த புதைபொருள் திணைக்களம் வனவளத் திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவை மீண்டும் முழுஅளவில் சிங்களக் குடியேற்றங்களையும் பௌத்த மயமாக்கலையும் மூர்க்கமாகத் திரும்பவும் தொடங்கியதையும் நாம் அவதானித்தோமா?.

மஹிந்த தரப்பின் ஆட்சி வந்தால் என்ன நடக்கும் என்பதை அவர்களின் 52 நாள் ஆட்சி ஓரளவு வெளிப்படுத்தியது. 52 நாள்களின் பின் மஹிந்தவிடம் இருந்து அரச அதிகாரத்தை மீளப்பெற்ற பின்பும் அவர்கள் ஆரம்பித்தவற்றை தடுத்து நிறுத்த; காணிகளை தொடர்ந்து விடுவிக்க பெரும்பாடு படவேண்டியுள்ளது. காணி விடுவிப்பு இப்போது ஒகஸ்ட் மாதம்தான் வலிவடக்கிலும் கிளிநொச்சியிலும் திரும்ப ஆரம்பித்துள்ளனர். எனவே இந்த அணியினர் மீண்டும் அரசைக் கைப்பற்றினால் என்ன நடக்கும் என்று தெளிவதற்கு வேட்பாளரின் பேச்சுக்களையும் வாக்குறுதிகளையும் கேட்டுத்தான் அறிய வேண்டுமா?.

கோட்டாதான் வெல்லப் போகிறார், அதனால் அவருக்கு ஆதரவாக இருந்தால் மட்டுமே நமக்கு ஏதாவது கிடைக்கும் இல்லாவிட்டால் ஒட்டுமொத்தமாக அழிக்கப் படுவோம் என்று பயமுறுத்துகிறார்கள். மஹிந்த முதல் முறையாக 2005ல் அரச தலைவராக வந்ததே தமிழரால் தானே. வந்து என்ன செய்தார் என்று மறந்தா போனோம். அரசியலில் அப்படி எதுவும் இல்ல வேயில்லை. நிரந்தர நண்பனும் இல்லை, பகைவனும் இல்லை. நாம் ஒரே அணியாக பலமாக இருந்தால் எமது உதவி அவர்களுக்கு தேவை என்றால் பகைமை பார்க்கவே மாட்டார்கள். உடனே ஆகக் குறைந்த பட்சமாக எதையாவது தந்து தமது காரியத்தைச் சாதிப்பார்கள். அரசியல் செய்வார்கள். அதுதான் அரசியல். எமது பலத்தின் மூலம் சந்தர்ப்பத் திற்கேற்ப காய்களை நகர்த்த முடியும்.

இதே அணியினர் இப்போது புலிகளைப் புகழவும் பிரபாகரன் 2005ல் மஹிந்தவுக்கு ஆதரவாகவும் ரணிலுக்கு எதிராகவும் செயற் பட்டார் என்பதாகவும் பேசுகின்றார்கள். தமிழ் மக்களின் நன்மைக்காக அறவே சிந்திக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சின்னாபின்னப் படுத்தி தமது ரிமோட் தலைமையை நிலைநாட்டுவதையே குறியாகக் கொண்டு செயற்படும் ஒருசில வெளிநாட்டுத் தமிழ்ப் பினாமிகளும் தமது உள்ளூர் முகவர்களோடு சேர்ந்து மஹிந்த அணியினருக்கு மீண்டும் முடிசூட்டவே படாதபாடுபடுகின்றார்கள்.

கோட்டா அணியினருடன் திரை மறைவில் கைகோர்த்துச் செயற்படுகின்றார்கள். வரவு செலவு வைத்துள்ளார்கள். ஒவ்வொரு தாயகத் தமிழ் வாக்காளனும் இவற்றை மிகத் தெளிவாக உணர்ந்து செயற்பட வேண்டும். ஏற்கெனவே மஹிந்த தரப்பினர் மைத்திரியின் கையை முறுக்கிப் பிடித்தபடி அவர் மூலம், அவரது பாதுகாப்பு அமைச்சு மூலம் தமது ஆட்டங்களை ஆரம்பித்து விட்டனர். சவேந்திர சில்வாவை தளபதியாக்கி முன்போல் சட்டத்திற்கு, பழி பாவங்களுக்குப் பயப்படாத இராணுவத்தை, இராணுவப் புலனாய்வுத் துறையை விரிவாக்கி, ஒரு சர்வாதிகார இராணுவ ஆட்சியை, குடும்ப முடியாட்சியை அமைக்கும் செயற்பாடு முடுக்கி விடப்பட்டுள்ளது.



## சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கான செயற்பாடு முடுக்கி விடப்பட்டுள்ளதா?

கோட்டாவின் ஓய்வுபெற்ற அனைத்து பழைய இராணுவத்தினரையும் அவரது தேர்தல் பிரசாரப் படையாக மாற்றி பிரசாரத்தை முன்னெடுக்கிறார்கள். அவர்கள் ஆட்சியைப் பிடித்தால் நாடு மீண்டும் 2009 ஐ விட மோசமான இருண்ட பாதாளத்தில் விழும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.



**ரணில் அணி:-**

விடுதலைப் போராட்டத் தரப்போடு போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கொண்டுவந்து ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த ஒப்பந்தம் செய்து அதை நடைமுறைப்படுத்த அனைத்தையும் ரணில் செய்தார். JVP யினரின் அழுத்தத்தால் அவரது ஆட்சியை சந்திரிகா கவிழ்த்திருக்காவிடில் இலங்கையும் ஈழத் தமிழரும் இன்று வேறு விதமான நாட்டில் வாழ்ந்திருப்பார்கள். சீனாவுக்கு அடமானமாக, யாருமே வாயே திறக்க முடியாத நிலையில் சிறைப்பட்டு நரக வாழ்வில் இருந்த இலங்கை மக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவியோடு மீட்டெடுத்து மக்கள் ஓரளவாவது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வைத்தது ரணிலும் அவரது கட்சியும் தான். 19 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனநாயகத்தை முடியுமான வரை இலங்கையில் நிலை நாட்டியுள்ளனர். சுயாதீனமான தேர்தல் ஆணையம், சுயாதீனமான நீதிநிர்வாகம், சுயாதீனமான பொலீஸ் சட்ட நிர்வாகம், சுயாதீனமான அரசசேவைகள் நிர்வாகம், உண்மைகளை வெளிக்கொணரும் உரிமை, ஊடக சுதந்திரம், தனிமனித சுதந்திரம் என்று இவற்றையெல்லாம் அந்தத் திருத்தச் சட்டம்தான் கொடுத்துள்ளது. ஜனாதிபதியும் மஹிந்த தரப்பும் பலமுறை பல வழிகளிலும் முயற்சித்தும் எதுவுமே செய்ய முடியாதவாறு அவர்களைக் கட்டிப் போட்டிருப்பது இந்தச் சட்டத் திருத்தம்தான்.

அதில் இன்னும் செய்ய வேண்டியவை பல இருந்தாலும் இந்த அளவிற்காவது கொண்டு வந்து இலங்கை மக்களை ஓரளவாவது இயல்பு வாழ்க்கைக்கு கொண்டுவந்தது ரணிலின் கட்சிதான்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான தீர்வுக்காகக் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புத் திட்டத்தை திருத்தமின்றி முழுமையாக ஏற்ற ஒரேயொரு கட்சி ரணிலின் கட்சிதான். அது நடைமுறைப் படுத்தப் பட்டால் தமது சர்வாதிகார அடக்குமுறை ஆட்சியை என்றுமே மீண்டும் கொண்டுவர முடியாதென்பதை உணர்ந்த மஹிந்த தரப்பு அதிகுள்ளத்தனமான சூழ்ச்சிகளால் மைத்திரியையும் அவரது கட்சிக்காரரையும் ஏமாற்றி அந்தப் புதிய அரசியற் திட்டத்தை முறியடித்து விட்டது.

ஆனாலும் கடந்த 40 வருடங்களாக முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த வடக்கு,கிழக்கு அபிவிருத்திகள் ரணிலின் அரசினால் மிகப் பெருமளவில் முன்னெடுக்கப்படுகின்றன. ரணில் மீதும் அவரது கட்சி மீதும் விமர்சனங்கள் இருக்கலாம். அவர் நினைத்ததைச் செயற்படுத்த முடியாதவர், கட்சிக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்த முடியாதவர், முடியாதவிடத்து எவரையும் ஏமாற்றுபவர், உறுதியான தலைவர் அல்லர். என்றெல்லாம் சொல்லப்படலாம். ஆனாலும் அவர் இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்தால்தான் நாட்டை அபிவிருத்தி செய்து முன்னேற்ற முடியும் என்று நம்பிச் செயற்படுபவர்.

அவர் ஒரு சிங்களவர், சிங்கள மக்களின் ஜனநாயக வாக்குகளால் தான் அதிகாரத்தில் இருக்க முடியும் என்பதை நாம் மறக்கக் கூடாது. நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது எஞ்சியிருக்கும் எமது நிலத்தையாவது பறிகொடுக்காமல் பாதுகாத்துக் கொண்டு எம்மை நாமே பொருளாதாரத்திலும் கல்வி சுகாதாரத்திலும் வலுப்படுத்துவதே. அதை ரணிலின் அரசாங்கத்தில் செய்ய முடிந்துள்ளது, இனியும் செய்யலாம்.

ரணில் தேவதூதனோ இரட்சகரோ மற்றொரு காந்தியோ அல்லர் என்பது அனைவருக்கும் தெரியும். அவரது தரப்பை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதை விட மஹிந்த தரப்பை வராமல் தடுக்க ரணில் தரப்பைக் கொண்டு வருவதைத் தவிர தமிழருக்கு வேறு ஆயுதம் இலங்கையிலோ உலகத்திலோ இல்லவேயில்லை. அவரையும் அவரது கட்சியையும் விடச் சிறந்த தலைவரும் கட்சியும் இல்லாதவரை கோட்டாபய என்ற கொடிய மனிதனை அகற்ற ரணிலின் கட்சியைத் தவிர எமக்கு மாற்று வழியில்லை. வேறு எந்தக் கட்சியை ஆதரித்தாலும் அது ரணில் தரப்பைத் தோற்கடித்து மறைமுகமாக கோட்டாவின் வெற்றியைத்தான் உறுதிசெய்யும்.

எனவே ஈழத்து தமிழ் மக்களே உங்கள் அமைதியான வாழ்வைக் கலக்கி தமது தேவைக்காக உங்களைப் பந்தாடும் வேட்பாளரின் போலி வாக்குறுதிகளில், பிரசாரங்களில் திண்டாடி உங்கள் கவனத்தையும் நேரத்தையும் செலவிட்டுக் குழம்பி ஏமாந்து வேதனைப்படாமல் தேர்தலன்று மட்டும் உங்கள் பெறுமதிமிக்க வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தி கிடைக்கும் பயனை அனுபவித்து நல்வாழ்வு வாழ்வோம். ★

# 23 ஆவது ஆண்டு தாச்சிப் போட்டி சிறப்பு விருந்தினராக மேயர் ஆனல்ட்







யாழ்ப்பாணம், செப்.23

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் 23 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து சிறப்பித்தமையுடன் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், உடுவில் பிரதேச செயலர், வலி தெற்கு பிரதேசசபை தவிசாளர், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள், அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். (இ






## தெல்லிப்பழை கருவுறுதல் பரிந்துரை நிலையம்

# இந்தியா, கொழும்பு செல்வதை விடுத்து இங்கேயே குறைந்த செலவில் சிகிச்சை




யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை கருவுறுதல் பரிந்துரை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.குழந்தை பேற்று மருத்துவர் நிலந்த ரத்நாயக்கவால் இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது. நைன்வெல்ஸ் வைத்தியசாலையுடன் இணைந்து இயங்கவுள்ள இந்த வைத்தியசாலை மூலம் விந்து பரிசோதனை உட்பட ultra sound பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்குச் செல்லாமலே இந்த பரிசோதனைகளை இந்த வைத்தியசாலையிலேயே மேற்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றுள்ளமையுடன் பயனாளிகளுக்கு மலசலகூட கோப்பைகளும் வழங்கப்பட்டமையுடன் இலவச சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டன. மருத்துவர் நிலந்த ரத்நாயக்க கருத்து தெரிவிக்கும் போது –

மகப்பேற்று சிகிச்சையை யாழ்ப்பாண மக்கள் பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு வந்து சிகிச்சையை மேற்கொள்வதால் யாழ்ப்பாணத்திலேயே சிகிச்சை நிலையத்தை திறப்பதன் மூலம் மக்களின் அலைச்சலை குறைக்க முடியும் என்ற காரணத்தால் இங்கே ஒரு சிகிச்சை நிலையத்தை திறந்துள்ளோம்.

இந்தியா சென்று பெரும் தொகை பணச் செலவு செய்து சிகிச்சையை மேற்கொள்ளவேண்டிய தேவை இனி இல்லை. இங்கேயே குறைந்த செலவில் சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

குழந்தைப்பேறு வீழ்ச்சிக்கு விவசாய உற்பத்திக்கு பயன்படும் கிருமி நாசினிகளும் ஒரு காரணமாக அமைவதுடன். முதிர்ந்த வயதும் காரணமாக அமைகிறது. மேலும் மனவிரக்தி அதாவது போர் இடம்பெற்ற மண்ணில் போருக்கு முகம் கொடுத்தவர்கள் என்ற காரணத்தால் அச்ச உணர்வு அவர்களை ஆட்கொண்டதாலும் இந்த விளைவு ஏற்பட்டுள்ளது. தங்களை மாற்றிக் கொண்டு பழக வேண்டும்.– என்றார்.



# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் முயற்சி முறியடிப்பு!

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.23

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைக்கு அதைப்பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மாத்தளை ஆமினா தேசியக் கல்லூரியில் மாணவ தலைவர்களுக்கு இலச்சினை அணிவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பின், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர்



ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

சக பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தாமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் முயற்சிக்கு நாங்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றோம். எங்களது எதிர்ப்பின் பின்னர் இந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனரஞ்சக வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவதை தடுக்கும் பின்னணியில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்ற சந் தேகம் எல்லோர் மத்தியிலும் எழுந்திருக்கின்றது.

எதுஎவ்வாறாக இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் சரியான நேரத்தில் சரியான முடிவை அடுத்த வாரமளவில் அறிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# கோட்டாபயவுக்கு எதிராக குவியும் குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, செப். 22

ஆட்பதிவுத் திணைக்களம் செல்லுபடியற்றது என அறிவித்த தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 2017 ,2018 மற்றும் 2019 இல் வாக்காளர் பதிவில் தனது பெயரைப் பதிவு செய்தார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இதுகுறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டை தேர்தல் தொகுதியில் உள்ள கங்கொடவில தெற்கு 526 ஏ கிராமசேவையாளர் பிரிவில் கோட்டாபய ராஜபக்ஷ தன்னை வாக்காளராகப் பதிவு செய்துள்ளார் எனத் தெரிவித்துள்ள ஆங்கில நாளிதழ், வாக்காளர் பதிவை ஆராய்ந்த வேளை இது தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களம் செல்லுபடியற்றது என அறிவித்துள்ள தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தியே கோட்டாபய பதிவு செய்துள்ளார் . சமீபத்திலும் குறிப்பிட்ட முகவரியிலிருந்து தன்னைப் பதிவு செய்வதற்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்ட அடையாள அட்டையைப் பயன்படுத்தியுள்ளார் .

இரட்டைப் பிரஜாவுரிமையைப் பயன்படுத்தி புதிய தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்ட ஒருவர் முன்னைய அடையாள அட்டையைப் பயன்படுத்துவது பாரதூரமான குற்றம் என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பிரஜைகளானதன் காரணமாக இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்த பின்னர் பின்னர் இரட்டைக் குடியுரிமை அடிப்படையில் இலங்கைப் பிரஜாவுரிமையை பெற்றுக்கொண்டவர்கள் விடயத்தில் இவ்வாறு அடையாள அட்டையைச் செல்லுபடியற்றதாக்கும் நடைமுறை காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2003 இல் அமெரிக்கப் பிரஜையானவேளை தனது இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்ததாகக் குறிப்பிட்டு வரும் கோட்டாபய ராஜபக்ஷ 2005 இல் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றவேளை அதனை மீளப் பெற்றுக்கொண்டார் எனத் தெரிவித்து வருகின்றார்.

இலங்கையின் ஆட்பதிவுத் திணைக்கள ஆவணங்களின் படி கோட்டாபய ராஜபக்ஷ 2016 இல் தனது பழைய தேசிய அடையாள அட்டையைக் கைவிட்டுப் புதிய அடையாள அட்டையை பெற்றுள்ளார் என ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. (ஐ)

# உத்தரதேவி தடம்புரண்டதால் வடக்கு ரயில் சேவை பாதிப்பு!



கொழும்பு – காங்கேசன்துறைக்கிடையிலான உத்தரதேவி ரயில் பொல்காவலையில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக வடக்கிற்கான ரயில் சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே கட்டப்பட்டு நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் வடக்கு மார்க்கத்திற்கான ரயில் சேவையை மீண்டும் வழமைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் ரயில்வே கட்டப்பட்டு நிலையம் அறிவித்துள்ளது.

# பிக்குவின் உடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்கு நீதிமன்றம் தடை!

முல்லைத்தீவு, செப். 23

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில், பௌத்த பிக்குவின் உடலை தகனம் செய்யத் தடை விதித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக, பிக்குவின் உடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்ய அனுமதிக்கவேண்டாம் என முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தார் அமைச்சர் மனோ கணேசன்.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில், கொலம்பே மேதாலங்காதர தேரர் சட்டவிரோதமாக ஒரு விகாரை அமைத்து, அதற்கு குருகந்த ரஜமகா விகாரையென பெயர் சூட்டியிருந்தார். அரச நிர்வாக அலகுகளும் அவருக்குத் துணைபுரிய, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபட இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் புற்றுநோயால் உயிரிழந்தார்.

அவரது உடலை ஆலய வளாகத்திலுள்ள விகாரையில் தகனம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து, நேற்று முன்தினம் அந்தப் பகுதி பொதுமக்கள் பொலிஸாரிடம் இது குறித்து முறையிட்டனர்.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு மேலதிக நீதிவானின் கவனத்துக்கு கொண்டு சென்ற பொலிஸார், ஆலய வளாகத்தில் பிக்குவின் உடலைத் தகனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், சடலத்தை அங்கு கொண்டு வந்து அஞ்சலி செலுத்துவதைத் தடை செய்ய முடியாதென நீதிமன்றம் தெரிவித்தது.

இதேவேளை, முன்னதாக அமைச்சர் மனோ கணேசனின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பிரதேசத்திற்குரிய தவிசாளர் ஆகியோரைத் தொலைபேசி வழியாக தொடர்பு கொண்ட மனோ, அதற்கு இடமளிக்க வேண்டாமென கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார்.

# ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் 17 கிளைகள் இலங்கையில்

## சுப்ரமணியன் சுவாமி தகவல்



கொழும்பு, செப். 23

இந்தியாவின் தீவிர வலதுசாரி இந்துத்துவ அமைப்பான ராஷ்ரிய சுயம் சேவக் சங் (ஆர்எஸ்எஸ்) அமைப்பின் கிளைகள் இலங்கையிலும் செயற்படுகின்றன என பா.ஜ.கவின் தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின், திருமண வரவேற்பு நிகழ்வு கடந்த 17ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது.

இந்த திருமண வரவேற்பு விழா வில் பங்கேற்க வந்திருந்த சுப்ரமணியன் சுவாமி, ஊடகங்களுடன் பேசும் போதே, இலங்கையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் 17 கிளைகள் இயங்குகின்றன என தெரிவித்துள்ளார். எனினும், எந்தெந்த அமைப்புகள் ஆர்.எஸ்.எஸ். பின்னணியுடன், அதன் கிளைகளாக இயங்குகின்றன என்ற விவரத்தை சுப்ரமணியன் சுவாமி வெளியிடவில்லை.

இந்த நிகழ்வில், பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமி, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தேசிய நிறைவேற்றுக் குழுவில் பணியாற்றியவரும், பா.ஜ.கவின் தேசிய செயலருமான ராம் மாதவ், இந்தியாவின் முன்னாள் பிரதமர் தேவகௌடா, இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2019 இல் வெளியிடப்பெற்றது.